# திராவிடநாடு

14—2—60 | வார வெளியீடு | விலை 16 காசு


## தொலைவார்!

[இரா. திருமொழிலன்]

எடுப்பு:

வந்தால் தொலைவார் போதில்—வஞ்ச
வடவர் இந்தியைக் கொண் டிங்கே (வந்தால்)

உடனெடுப்பு:

செந்தமிழ்க் கூறிழைக்க உலமே திரண்டாலும்
சீறி யழித்திடும் வண்டமிழ்ப் படையே! (வந்தால்)

அடிகள்:

இந்தியெனும் பந்தியே தாவி வந்தாலும்
இனியொரு துன்பமே தொடர்ந்து வந்தாலும்
நந்தமிழ் நாட்டினர்ஓட்டிடு வாரதனை!
நம்பியே மோசம் செய்திடற் கினியும் (வந்தால்)

ஆற்றில் வாழ்ந்தும் அவனி சுற்றியும்
அன்புடன் பண்பையும் அடகிற்கு வைத்துமே
பாடுகள் பட்டார் தமிழகம் கொள்ளவே!
பாரிடம் அவர்தமைக் கண்டு எள்ளவே (வந்தால்)

# கூட்டாட்சி முறை!



"கூட்டாட்சி முறை" என்பது அண்மையில் அரசியல் வரலாற்றில் ஏற்பட்ட ஒரு புதுமுறையாகும். இது திடீரென்று தோன்றியதல்ல; இதற்குப் பின்னால் ஒரு வரலாறே உள்ளது!

ஆதி மனிதன் நாகரிகமற்றுக் காடுகளில் அலைந்து திரிந்து கொண்டிருந்த பொழுது "வல்லான்" மாத்திரமே பலரை அடக்கி வாழ முடிந்தது. நாளடைவில் தனி மனிதன் வாழ்க்கை முறை மாறிக்குடும்பமுறைஉண்டாயிற்று. இப்போது குடும்பத் தலைவன்—தந்தை எல்லோருக்கும் தலைவனாக இருந்து ஆண்டுவந்தான்.

பின்னர் பல குடும்பங்கள் சேர்ந்து ஒரு சமுகமாகவும், பல சமுகங்கள் சேர்ந்து ஒரு பகுதியாகவும், பகுதிகள் பல பின்னர் ஒரு நாடாகவும் உருவெடுத்தன. 'நாடு' என்ற நிலை உருவானபோது, அதற்கு ஒரு தலைவனைத்தேடினர். அவன்தான் 'அரசன்' எனப்பட்டான். மக்கள் வாழ்வு—வளம் எல்லாவற்றிற்கும் அவனே காரணம் என்று நம்பினர்.

'மன்னன்' தெய்வத்திற்கு அடுத்தவன் என்றும், அவன் பணி செய்வது 'அருள்' பெற்றதாகும் என்றும் அக்காலத்திய மக்கள் எண்ணினர். எனவே தங்கள் வாழ்விலும் மேலாக அரசனின் வாழ்வையே விரும்பினர்! அரசன் வாழ்ந்தால் தாங்களும் வாழ்ந்ததாகக் கருதினர்! இந்த எண்ணம் அவர்களிடம் பதிந்திருந்த காரணத்தினால்தான் அடிக்கடி உற்சாகமாகப் போரில் ஈடுபட்டு, மெய் வருத்தம் பாராது, கண் துஞ்சாது பசியைப் பாராது அரசனுக்குச் சேவை செய்தனர்!

காலப்போக்கில் இவ்வெண்ணத்திலும் மாறுதல் ஏற்படலாயிற்று. அரசன்செய்வது எல்லாம் நன்மையாக இருக்கும் என்று எண்ணிக் கிடந்த மக்கள், அவன் தலைவனே தவிர, தெய்வப் பிறவி அல்ல; அவன் செய்வனவற்றிலும் தவறிருக்கும்" என்ற கருத்து வளரலாயிற்று.

இதற்கு அரண் அமைப்பது போல இருந்தது அக்காலத்திய அரசர்கள் செய்த அநியாயங்கள். 'அரசன்' என்ற போர்வையில் அவர்கள் செய்த அட்டகாசங்கள்—அநாகரிகச் செயல்கள்—கொடுரங்கள் ஏராளம். கிரேக்க—ரோமானிய அரசுகளே இவற்றிற்குச் சிறந்த ஆதாரங்களைத்தரும்!

ச. வெ. பாண்டியன்

இதன் விளைவாக மன்னனைக் கட்டுப்படுத்த முனைந்தனர். இதைச் செய்யலாம்; அதைச் செய்யக்கூடாது, இச்செயலைச் செய்வதற்கு மக்களையும் கலந்து செய்யவேண்டும், இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு இன்ன முறையில்தான் போகவேண்டும் என்றெல்லாம் எல்லைப்படுத்தினர்.

குறிப்பாகச் சொல்லப்போனால் "அரசியல் அமைப்பு" உருவாயிற்று எனலாம். முதன் முதல் இம்முறை உருவானது 'பிரிட்டனிலாகும்' தற்காலத்திய 'அரசியல் அமைப்பு' (Constitution) முறைகளுக்கெல்லாம் 'பிரிட்டனே' தாயாகும்! பிரிட்டனைப் பார்த்துத்தான் மற்ற நாடுகளில் பிரிட்டன் முறையை ஒட்டியும், மாறுபட்டும் தத்தம் நாட்டிற்கேற்றவாறுமாற்றி அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. பிரிட்டனில் கண்டதைக் கொண்டுதான் பலவகையான அரசியல் அமைப்புத் தத்துவங்களும் ஏற்படலாயின.

அரசன் தலைவனாக இருப்பான்; ஆனால் இங்கு பாராளுமன்றமும் இருக்கும்! இப்படிப்பட்ட அரசியல் அமைப்பு நாடுகளும், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவனைக்கொண்ட அரசியல் அமைப்புமுறை நாடுகளும், சர்வாதிகார 'அரசியல் அமைப்பு முறை நாடுகளும்... இவ்வாறாகப் பல அரசியல் அமைப்பு முறைகள் உருவாகலாயின!

இதற்குப்பின்னர் பல சிறு தனி நாடுகள், தங்களின் வெளிநாட்டுப் பாதுகாப்பிற்காகவும், அமைதிக்காகவும், பொருளாதார வளர்ச்சிக்காகவும், தத்தம் 'சுதந்திரத்தை' இழந்துவிடாமல் மத்திய ஆட்சி ஒன்றைத் தேர்ந்தெடுத்தனர். அதற்கென்று சில அதிகாரங்களை விட்டுக்கொடுத்தனர். இதற்கெனச் சில 'இறை' துறைகளையும் ஒதுக்கினர். இதுதான் கூட்டாட்சி (Federation) முறையாகும். ("It springs from the necessity for the union of a number of independent States which are not strong enough individnally to protect themselves from outside danger, and whose union is requisite for their Safety and for the promotion of their economic interests but which are not prepared to surrender their independence completely".

–G. N. Joshi. M. A., LL B., The constitution of India")

கூட்டாட்சி முறை என்பது தற்காலத்தில் உருவாகியுள்ள ஒன்ருகும். முன்னர் இம்முறை 'கிரேக்கத்தில்' சிறிய அளவில் இருந்திருந்தாலும், விரிந்த பொருளில்—உயர்ந்த அமைப்பில் திரண்டிருப்பது இக்காலத்திலேயாகும். இன்றைய உலகில் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, இரஷ்யா; சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிலெல்லாம் இக் கூட்டாட்சி முறை இருந்து வருகிறது. 'இந்தியாவும்' கூட்டாட்சி முறையில் ஆளப்படுவதாகச் சொல்லப்படுகிறது?

"கூட்டாட்சி முறை' அரசியல் அமைப்பிற்கு, பேராசிரியர் எ. வி. டிசி அவர்கள் "அரசியல் அமைப்புச் சட்ட விளக்கம்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளது போல இருவரைமுறைகள் தேவையாகும். ஒன்று, கூட்டாட்சியில்ஒன்றியிருக்கப்போகும் தனிநாடுகள் நீண்டகால வரலாறு, இன உணர்ச்சி, பண்பாடுகொண்டவைகளாக அல்லது அந்நாட்டுத் தேசியப் பண்பாடுடன் இயங்கவேண்டும். இரண்டாவதாக அவைகளுக்கிடையில் கூட்டாகவாழும் விருப்பம் இருக்கவேண்டுமே தவிர, ஒன்ருகிவிடும் போக்கு இருந்துவிடலாகாது. (They must desire union but must not desire unity)

மேலும் ஒன்றியுள்ள நாடுகளின் சுதந்திர வாழ்வைக் "கூட்டாட்சி" நசுக்கிவிடக்கூடாது. கூட்டாட்சியில் அங்கமாக விளங்கும் நாடுகளுக்கிடையில் வேற்றுமை பாராட்டுதல் கூடாது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஏற்படவழிவகுத்துவிடலாகாது. மக்களிடையே கல்வி அறிவைப்பெருக்கிக் கூட்டாட்சியின் பெருமையை உணரச் செய்யவேண்டும். நாடுகளுக்கிடையில் மனக்கசப்புகளும், மத்திய ஆட்சியின்மீது வெறுப்பும் ஏற்படாமலிருக்க வேண்டுமாஞல் மத்திய அரசுக்கும், மற்ற அரசுகளுக்கும் உள்ள "அதிகாரவரம்புகள்" பொருத்தமான முறையிலும் திருப்திகரமான தன்மையிலும் இருக்கவேண்டும். 'பெரிய அரசுகள்' மத்திய அரசில் அதிக சலுகைகள் பெறும் நிலை இருத்தல் கூடாது. "அரசியல் அமைப்பு முறை"யைத் திருத்துவதற்குண்டான முறை 'வல்லின'மாக இருக்கலாகாது. எல்லாவற்றிற்கும் மேலாக அரசுகள் விரும்பிஞல் தனியாகப் பிரிந்துபோகும் உரிமை வழங்கப்படல்வேண்டும். நல்ல கூட்டாட்சி அமைப்புக்குத் தேவையானவைகளில் சிறந்தன இவ்வரைமுறைகளாகும். அப்படியாஞல்தான் கூட்டாட்சி நீடித்து நிற்கமுடியும்.

பொதுவாக மத்திய ஆட்சிக்கு (Central Government) பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்பு, சீரான பொருளாதார வளர்ச்சி ஆகியவைகள்தான் முக்கிய குறிக்கோளாக இருக்கவேண்டும். கூட்டாட்சிமுறை என்ருலே பலமற்ற ஆட்சி என்றுதான் பொருள். Federal government means weak Government (A. V. Duicy) கூட்டாட்சி முறையில் மத்திய ஆட்சி வெளிநாட்டுத் தொடர்பில் பலமுள்ளதாகவும், உள்நாட்டில் பலமற்றதாகவும் இருக்கும். அதற்குக் கட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களே இருக்கும். இவைகளும் கூடச் சூழ்நிலைக்கேற்ப அழிந்துபடக்கூடியனவாகும்.

("Federal government has very decided limitations. serions faults of structures unheeded perhaps at the time if its inception, but likely to break down under the altering strain is a new environment. Politically and on its internal side it has proved itself strong but economically and in its internal aspect it is proving itself weak" — 'Steaphen Leacock" in his 'Elements of Political Science")

"கூட்டாட்சியில்" மத்திய ஆட்சியின் பொதுத்தன்மை எவ்வாறு இருக்கவேண்டும் என்று பார்த்தோம். சரி! இனி இந்தியாவிற்கு வருவோம்.

"இந்தியா" என்ற பெயருள்ள நாடு ஒன்று இருப்பதாகப் பிரிட்டனின் துப்பாக்கி முனையில் ஏற்படுத்தப்பட்டபின்தான், உலகுக்கு உணர்த்தப்பட்டது. "இந்தியா" ஒரு உபகண்டம் என்பதும், இதில் பல்வேறுபட்ட இனத்தார்கள் வாழ்கிருர்கள் என்பதும் "இமய மலை போன்ற" உண்மையாகும்! இப்படிப் பல தனிநாடுகள்கொண்ட உபகண்டத்தில் கூட்டாட்சி முறை இருப்பது (அவைகள் விரும்பிஞல்) நல்லது எனலாம்! அதுதான் இருக்கவும் வேண்டும்!

ஆஞல் இந்தியா ஒருகூட்டாட்சி நாடா? என்பது இன்னும் விஞக்குறியதாகவே இருக்கிறது. "இந்தியாவில்" கூட்டாட்சி முறையும், ஒற்றை ஆட்சிமுறையும் (Unitary State) கலந்து இருப்பதைக் காணலாம். "இந்திய அரசியல் அமைப்பு" முறையானது கூட்டாட்சி முறை "மாதிரி" இருக்கிறது. அதாவது ஒருவகையில் கூட்டாட்சிமுறை இருக்கிறது, என்று சொல்லலாம்.

("The Constitution is quesi—federal, that is, federal in a certain sense or degree"–"The Indian Constitution at a Glemce" by M. S. Shohani M.A. (Oxon)

இந்திய அரசியல் அமைப்பு முறை அரசியல் வல்லுநர்களின் கூற்றையெல்லாம் தப்பிலித்தனம் செய்வதாக இருக்கிறது. பேராசிரியர் டி. சி. அவர்களின் ஓரினமக்கள் கொண்ட நாட்டினர் பலர் சேர்ந்து அமைப்பதே "கூட்டாட்சி" என்பதை இங்கு தூரத்தூக்கி எறிந்திருக்கிருர்கள். "இந்தியாவில்" பல்வேறின மக்கள் இல்லை என்பதுபோல் இருக்கிறது இந்தியாவின் அரசியல் அமைப்பு முறையைப் பார்க்கும்போது. மேலும் அரசியல் வல்லுநர்கள் கூட்டாட்சி முறைக்கு எதெது நல்லது என்று கூறியிருக்கிருர்களோ, அதையெல்லாம் உதறித் தள்ளியிருக்கிருர்கள். வேண்டுமென்றே மத்திய அரசினருக்கு அதிக அதிகாரத்தைக் கட்டிக்கொடுத்திருக்கிருர்கள். இது வேண்டுமென்றே செய்த செயல் என்பதற்குக் காரணம் இல்லாமலில்லை.

இன்றைய உலகில் எத்தனையோ கூட்டாட்சி முறையுள்ள நாடுகள் இருக்கின்றன. இவற்றில் அமெரிக்கக் கூட்டாட்சி சிறந்த முறையில் இருக்கிறது என்பது அரசியல் வல்லுநர்களின் கூற்ருகும். அமெரிக்கக் கூட்டாட்சி முறை ஏற்பட்டது 1789ம் ஆண்டிலாகும். இத்துணை ஆட்சி அமைப்பு முறைகளையெல்லாம் பார்த்த பிறகு 1950ம் வருடத்தில் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் அமைப்பில் நல்ல தன்மைகள் இல்லை என்ருல் என்ன பொருள்? வேண்டுமென்றே சிறந்த முறைகளை உதாசீனம் செய்திருக்கிருர்

கள் என்பதைத் தவிர வேறு என்ன?

அடுத்ததாக "மத்திய ஆட்சிக்கு" கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் மற்ற எந்தக் குடியாட்சி முறைக் கூட்டாட்சியிலும் இல்லாததாக இருக்கிறது. அது எவ்வாறு என்பதைப் பார்ப்போம்.

அமெரிக்கக் கூட்டாட்சி முறை உருவானது மத்திய ஆட்சியினர்களால் அல்ல. 1789ல், 'பிலடெல்பியாவில்'' கூடிய பல சிறு நாடுகள் மத்திய ஆட்சிக்கென்று சில அதிகாரங்களை வழங்கியது; மத்திய ஆட்சி அவற்றைப் பெற்றுக் கொண்டது. ஆனால் இந்தியாவைப் பொறுத்த அளவில் அது வேறுவிதமானது. அமெரிக்காவைப் போலன்றி மத்திய ஆட்சி தான் மற்ற அரசுகளுக்கு அதிகாரங்களை வழங்கியது; மற்ற அரசுகள் அவற்றைப் பெற்றிருக்கின்றன.

வெள்ளைக்காரன் விட்டுப்போன அமைப்பிலிருந்துகொண்டு அதிகாரத்தோடு தந்திருக்கிறது சில அதிகாரங்களை—மற்ற அரசுகளுக்கு! மத்திய ஆட்சியினர் அதிகாரக் குரல் ஆரம்பத்திலிருந்தே தலைகாட்ட ஆரம்பித்துவிட்டது எனலாம்.

கூட்டாட்சி முறை நன்கு இயங்குவதற்கு அதிகாரம் நன்முறையில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். "இந்தியாவில்'; அது ஒருதலைப்பட்சமாகவேதான் இருக்கிறது மத்திய ஆட்சிக்கு 97 துறைகளிலும், மாநில அரசுகளுக்கு 66 துறைகளிலும், 47 துறைகளில் மத்திய ஆட்சியும், மாநிலமும் சேர்ந்தும் இம்மூன்றிலும் குறிப்பிடாதவைகள் (Pesiduary powers) மத்திய ஆட்சிக்குமாக அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது.

மாநில அரசைவிட மத்திய ஆட்சியினருக்கே அதிக அதிகாரத் துறைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மத்திய ஆட்சியில், மாநில ஆட்சியும் ஏககாலத்தில் உபயோகிக்கும் அதிகாரத் துறைகளில் (Concurrent powers) கூட மத்திய ஆட்சியே அதிகசலுகை பெறுகிறது. இதுமாத்திரமல்லாமல் கடைசி அதிகாரம் கூட (Pesiduary powers) மத்திய ஆட்சியிடமதான இருக்கிறது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா சுவிச்சர்லாந்து, இரஷ்யா, 'வெய்மார்' செர்மனி ஆகிய கூட்டாட்சி நாடுகளிலெல்லாம் மூன்றிலும் குறிப்பிடாதன மாநிலங்களுக்கே வழங்கப்பட்டுள்ளன.

இந்தவிதமான பகிர்வால் மாநிலங்கள் அறுதியிடப்பட்ட சில அதிகாரங்களையே உபயோகிக்க வேண்டியதாகிறது. மத்திய அரசின் அதிகாரம் வரம்பிடப்பட்டிருந்தாலும், எல்லா மாநிலங்களிலும் அதன் அதிகாரம் ஊடுருவ வழி இருக்கிறது ["The result of the destribution of power between the federation and the unit is that the State Government are government of limited and enumerated powers and though the Union Government is also a government or limited and enumerated powers it has under certain circumstances power even over the State Governments and has the residuary power over the whole territony"—Dr. B. R. Andedkar in his "Speech in the constitment Assembly."]

கூட்டாட்சி முறையில் நாட்டு மக்களுக்கெல்லாம் இரு குடிமைப் பதிவு (citizin ship) உண்டு. அமெரிக்காவில் மத்திய ஆட்சிக் குடிமகன், மாநில ஆட்சிக் குடிமகன் என்ற இருவகைக் குடிமைப் பதிவு உண்டு. ஆனால் இந்தியாவில் அப்படியல்ல! ஒரே குடிமைப் பதிவு தான் உண்டு!

இந்தியாவின் தலைவர் மக்களால் அமெரிக்கத் தலைவரைப் போல, நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பது மாத்திரமல்லாமல், அவரைவிட அதிக அதிகாரம் செலுத்துகிறார்! அவர் விரும்பிய நபரை ஒரு மாநிலத்திற்குத் தலைவராகவும், அவர் விரும்பினால் அம்மாநில அமைச்சரவையை மாநிலத் தலைவர் மூலம் (கவர்னர்) கலைக்கவும் ஆன அதிகாரம் இந்தியத் தலைவருக்கு இருக்கிறது.

மாநிலத் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை– இங்கு. ஆனால் அமெரிக்காவில் 'ஓட்டு'' மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இந்த மாநிலத் தலைவர் மத்திய தலைவரால் நியமிக்கப்படுகிறார். ஆனால் அவருக்குப் படியளப்பது மாநில அரசேயாகும். இது மாநில சுதந்திரத்தைக் கட்டுப்படுத்திவிடுகிறது. "கேரளத்தில்'' இவ்வதிகாரத்தின் மூலம்தானே மத்திய தலைவர் தலையிட்டுக் கலைத்தார்!

மாநிலங்களுக்கிடையில் மத்திய மேல் சபையில் (Upper chamber) சமத்துவம் இருக்கவேண்டும். அதாவது தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் சம விகிதத்தில் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அதிக உறுப்பினர்கள் உள்ள மாநிலம் மத்திய ஆட்சியினரைத் தன் வயப்படுத்தக் கூடும். இந்நிலை "இந்தியாவில்'' சர்வசாதாரணமாகும். உ. பி. அதிக மக்கட் தொகை உள்ளதால் மத்திய அரசைத் தன்வயப்படுத்தித் தனக்கு வேண்டிய காரியங்களை எளிதில் பெற்றுக்கொள்கிறது. மற்ற மாநிலங்கள் வருந்த நேரிடுகின்றன.

இதைத் தடுப்பதற்காக மேல் சபைக்கு எல்லா மாநிலங்களும் இரண்டு உறுப்பினர்களைத்தான் அனுப்ப வேண்டும் என்ற முறை "அமெரிக்கா'' சுவிச்சர்லாந்து இரஷ்யாபோன்ற நாடுகளில் அமுல் நடத்தப்படுகிறது. ஆனால் "இந்தியாவில்'' மக்கட் தொகை அடிப்படை என்று பேசி மட்டற்ற அதிகாரம் செலுத்துகிறது—மத்திய ஆட்சி!

அமெரிக்காபோன்ற கூட்டாட்சி நாடுகளில் மத்திய அரசியல் அமைப்பு மாநில அரசியல் அமைப்பு என்ற இரண்டுவித அரசியல் அமைப்புக்கள் உள்ளன. இந்தியாவில் அப்படியல்ல! எல்லாம் மத்திய அமைப்பு மாத்திரமே!

பிரிந்துபோகும் உரிமை — கூட்டாட்சியின் சிறப்பான குறிப்பாகும். ஒரு மாநில அரசு, தன் கூட்டாட்சியினின்றும் விடுபட்டுப்போக விரும்பினால், அது எளிதில் செல்லலாம். ஆஸ்திரேலியா, அமெரிக்கா சுவிட்சர்லாந்து, கானடா, இரஷ்யா ஆகிய நாடுகளிலெல்லாம் பிரிந்துபோகும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தியாவில் அது வழங்கப்படவே இல்லை!

மாநிலங்களுக்கு ஐ.ஏ.எஸ். அலுவலர்கள் மத்திய ஆட்சியினர்களால் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் பதில் சொல்லக்கடமைப்பட்டதும் மத்திய அரசினர்க்கேயாகும். ஆனால் அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பது மாநில அரசு! என்னே வேடிக்கை! மேலும் டாக்டர் இரத்தினசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல மாநிலங்களுக்கென்று சுகாதாரத் துறைகள் இருக்கும்போது மத்தியிலும் சுகாதார அமைச்சுத்துறை

(13-ம் பக்கம் பார்க்க)

…18 ஆண்டுச் சந்தா ரூ. 8. (14-2-60) தனிப் பிரதி 10-காசு இதழ் 31

# வதந்திகளை வாய்மையாக்காதீர்

ஆயுதபலத்தைவிட அறிவுப் பலமே சிறந்தது, உயர்ந்தது, தேவையானது என்ற பேருண்மை தமிழகத்தில் தொன்றுதொட்டு இருந்துவந்த ஒரு சிறந்த பண்பாகும். ஆனால், இடைக்காலத்தில் அறிவாயுதத்தின் கூர் சிறிது மழுங்கிவிட்டது. அதற்குக் காரணங்கள் பல உண்டு. அவற்றை எல்லாம் இங்கு—இப்போது விளக்கிக்கூறுவது தேவையற்ற ஒன்றாகும்.

அறிவு பலம் பெறவேண்டும். அது இப்போது—இன்றைய—இவ்விருபதாம் நூற்றாண்டின் இன்றியமையாத் தேவையாகும்.

உலகெங்கணும் இன்று இதுபற்றிப் பேசப்படுவதைக் காண்கிறோம்—கேட்கிறோம்.

இதற்குப் பேருதவிசெய்த பெருமையும் புகழும் அணு ஆயுதக் கண்டுபிடிப்பார்க்கே உரியதாகும்.

ஏனென்றால், அணு ஆயுதம் கண்டுபிடித்த பின்னர்தான்—அதன் உபயோகத்தால் விளைந்த கொடூரமும், பயங்கரமும் நிறைந்த விளைவுகளைக் கண்ட பின்னர்தான் ஆயுத பலத்தைவிட அறிவுப் பலமே மேலானது—தேவையானது என்ற பேருண்மை புலப்பட்டது.

அணுவாயுதம் கண்டுபிடித்தவர்களே, அதனைத் தங்கள் அறிவுப் பலத்தால்தான் கண்டுபிடித்தார்கள் என்ற போதிலும்—அணுவாயுதம் அழிவு வேலைக்கும் ஆக்க வேலைக்கும் பயன்படுத்தலாம் என்ற போதிலும், முதலில், அதனை அழிவு வேலைக்கே பயன்படுத்தியதால், உலக மக்களிடையே அணுவாயுதம் என்றால், அது ஒரு நாச கருவி என்ற எண்ணம் பதியலாயிற்று.

இந்த எண்ணம் மக்கள் மனதில் பதிந்து நிலைபெற்றுவிட்டதை அறிந்த சிலர், இதற்கு ஒரு பரிகாரம் காணவேண்டுமென்று விரும்பி, உலகின் பல பகுதிகளிலும் "அணுவாயுதத் தடை" மாநாடுகள் கூட்டித் தங்கள் கோரிக்கைக்கு வெற்றி காண முயன்று ஓரளவு வெற்றியும் பெற்று வருகின்றனர்.

பிரஞ்சு நாட்டைத் தவிர, மற்றைய நாடுகள் பலவும் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவளித்து வருகின்றன.

அணுவாயுத உபயோகத் தடையோடு ரஷ்யா, அமெரிக்கா போன்ற பெரிய பெரிய நாடுகள் எல்லாம் தங்கள் படை பலத்தையே குறைத்துள்ளன.

ஆயுத பலம் குறைந்து அறிவுப்பலம் அதிகமாக வேண்டுமென்று பேசப்படும் இந்நாளில், அறிவுப் பலம் பெருகுவதைத் தடைசெய்வது போன்ற சில நிகழ்ச்சிகள் நடைபெறுவதையும், பேசப்படுவதையும், காண நமக்கு ஆச்சரியமும் வேதனையும் உண்டாகிறது.

காஞ்சிபுரத்திலுள்ள பச்சையப்பன் கல்லூரியை மூடிவிடுவது, உதகையிலுள்ள அரசினர் கல்லூரியை எடுத்துவிடுவது என்ற பேச்சு அண்மையில் அடிபட்டது.

இது உண்மையானதுதான் என்பதை நாம் நிச்சயமாக நம்பவில்லை. என்றபோதிலும், இப்படிப்பட்ட வதந்திகள், அறிவு வளரவேண்டுமென்று அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட இந்நாளில் பேசப்படுவது, அந்த நாட்டுக்கே ஒரு இழிவாகும். அறியாமை நீங்கி, ஆயுதபலம் குறைந்து அறிவுப் பலம் மேலோங்க வேண்டுமென்று தாங்கள் செல்லுமிடங்களில் எல்லாம் பேசிவரும் ஆட்சித் தலைவர்களைக்கொண்ட இவ்வுபகண்டத்தில், கல்வி நிலையங்களை மூடுவது என்பது வேடிக்கையும் வேதனையும் கலந்த ஒரு வருந்தத்தக்க செய்தியாகும்.

இதனை அரசினர் கவனித்து, நாட்டில் உலவிவரும் வதந்திகளை மறுத்து, கல்வி நிலையங்கள் மேலும் மேலும் வளரும் வாய்ப்பை உண்டாக்கவேண்டுமென்று பெரிதும் கேட்டுக்கொள்கிறோம்.

10—2—60ல் காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி நிதிக்காக நடைபெற்ற ஒரு கலை நிகழ்ச்சி (நாடகம்)க்குத் தலைமைவகித்த செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் அவர்கள், காஞ்சியிலுள்ள கல்லூரி மூடப்படும் வதந்தியைக் குறிப்பிட்டு, அது ஒருவேளை மூடப்படும் சூழ்நிலை ஏற்பட்டால்—(ஏற்படாது) அது நிலைத்து நிற்பதற்குத் தன்னாலான ஆக்கமும் ஊக்கமும் தருவதாகவும், காஞ்சியில் தொழிற்கல்வியோ விவசாயக்கல்வி நிலையமோ ஏற்பட்டாலும், பச்சையப்பன் கல்லூரி காஞ்சிபுரத்தில் நிலைபெற வேண்டுமென்பதில் தானும் ஒரு தமிழ்மகன் என்ற முறையில் தனக்குத் தனி வேட்கையும் ஆர்வமும் இருப்பதாகப் பேசியுள்ளதை இங்கு நாம் குறிப்பிட விரும்புகிறோம்.

எனவே, வதந்திகளை வாய்மையாக்காது பார்த்துக்கொள்வது அரசினர் கடமை என்பதை மீண்டும் வற்புறுத்திக் கூறி, அறிவுப் பலம் பெருக அனைவரும் ஒத்துழைக்க முன் வருக, வருக என்று அழைக்கிறோம்.

*

# திருமறை பாடுவோம்! திருநாள் கொண்டாடுவோம்!

நாடெங்கனும் நல்விழா! நல்லோர்கள் இதயமெங்கனும் திருவிழா! உழைக்கின்ற உத்தமனின் உள்ளத்திலே எத்தனை தான் இடரிருந்தாலும் அத்தனையும் பரிதி கண்ட பனிபோலப் பறந்தோடிவிடும் பெருவிழா! பொங்கல்விழா! எங்கும் இன்பம், இன்பம். எல்லோர் இதயத்திலும் எழில், எழில். அதோ பாருங்கள், 'எங்கள் இல்லுக்கு வாருங்கள், வாருங்கள். வந்து விருந்து அருந்துங்கள், அயருங்கள்' என்று மனம் மகிழ; நெஞ்சம் நெகிழ; மிஞ்சுகின்ற மகிழ்வினால் முகம் அப்பொழுதலர்ந்த முல்லையென முறுவலிக்க ஆணும், பெண்ணுமாக அத்தனைபேரும் அழைத்தழைத்துச் செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருந்து அமுதூட்டி அகமகிழ்கிறார்கள்.

எத்தனையோ விழாக்கள் நித்தநித்தம் நடைபெறுகிறது நமது தமிழகத்திலே எனினும், இதுபோல் இல்லை பிற என்பதைத் தவிர வேறுவழியற்றிடக் காண்கிறோம். கற்றோரும்; மற்றோரும், கலைஞர்களும் அறிஞர்களும், காவலர்களும் நாவலர்களும், இதனிலே ஈடுபாடே கொண்டிடக் காண்கிறோம்.

எனினும் விழாவைப் பலப்பலர் பலப்பல விதத்திலே கொண்டாடிடக் காண்கிறோம். 'பொங்கலோ பொங்கு'லென்று பூரிப்பர் பலர். 'மஞ்சோ மஞ்சு' என்று மிஞ்சுகின்ற வேட்கையினால் மாடு விரட்டி மகிழ்வர் வேறுபலர். 'கன்னியோ கன்னி'யென்று பெண்டிரெல்லாம் களிக்கக் கூவிடுவர். மற்றும் சிலர் இவற்றுக்கெல்லாம் ஏற்றம் பெறும் வகையிலே குறள் திறம் பேசிக் கொண்டாடுவர். இவ்வாறாக நாடே விழாக்கோலம் பூண்டிருக்கும் நனிமிகு காட்சியைக் காண்கிறோம்.

இதுபோன்ற விழாநாள் வேற்று நாடுகளில் கிடையாதா? நமக்கு மட்டுமென்ன மான்யமா? என்று கேட்டிடத் தோன்றிடும். மற்றைய நாடுகளில் பொங்கல் விழாவினைக் கொண்டாடுகின்றனர் பலப்பல பெயரிலே பலப்பல உருவிலே! அறுவடை விழா என்ற பெயரிலே சில நாடுகளிலே கொண்டாடப்படுவதாகவும் காண்கிறோம். ஆனால், நாம் கண்டிடும் விழாக்கோலத்திற்கும் அவர்கள் பூண்டிடும் விழாக்கோலத்திற்கும் ஏராள வேறுபாடுகள் உண்டு. நாம் இவ்விழாவினை நமது விழாக்கள்

**கரந்தை-கணேசன்**

அனைத்திலும் அரசாகக் கருதுகிறோம். அவர்களோ அவர்கள் கொண்டாடும் விழாக்களிலே, 'பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுஒன்று' என்றே கருதுகின்றனர். எதற்கும் காரணம் இல்லாமலில்லை.

சிலருக்குச் சிலரைக் கண்டால் பிடிக்கிறது. சிலருக்குச் சிலரைக் கண்டால் சீற்றம் பிறக்கிறது. அவரவர்களின் பாங்குக்கு ஏற்பப் பண்பு அமைகிறது. மங்கையர்பலர் என்றாலும், எல்லோருக்கும் மலர்கள் மேல்தான் விருப்பம் என்றாலும், ஒருவள் உயர்வாக எண்ணுவதை மற்றவள் உயர்வாக மதிப்பதில்லை. மங்கைக்கு மல்லிகை பிடித்தால்; செல்வாவுக்குச் செவ்வந்தி பிடிக்கிறது. முத்துவுக்கு முல்லை பிடித்தால்; அல்லிக்கு ரோஜாதான் பிடிக்கிறது. அதனாலேயே மலரிலேயே சிறந்தது எது என்று முடிவுகட்ட முடியாது என்றும் கூறிவிட முடியாது. செந்தாமரைதான் உயர்ந்தது, சிறந்தது என்று கூறிடவும் தயங்கக் கூடாது. அதைப்போலத்தான் விழாக்களும் அவற்றிலே சிறந்தது என அவரவர்களின் எண்ண எழுச்சிக்கு ஏற்பக்கொள்கிறார்கள்.

வேற்றுப் புலங்களிலே உள்ள அறிவாளர்கள்; நாட்டின் அடிப்படைக்குரிய ஆணிவேராக உள்ளவர்கள்; பொருளாதார வளர்ச்சியை நானாவிதங்களிலும் நாளும் பெருக்குகின்ற நல்லவர்கள் தான் என்ற உண்மையை உணர்ந்திருந்தாலும், அப்படிப்பட்ட ஆணிவேரினர் யார் என்று கருதும் பொழுது பிறருழைக்கக் கண்டிருந்து உண்டு கொழுத்து உடல் வளர்ப்பவர்களே என்று கருதினார்கள். அதன் விளைவுதான் பொங்கல் விழாப்போன்ற விழாக்கள், ஏதோ ஓரவிழாக்களாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. அதற்குக் காரணம் பிறருழைக்கத்தான் வாழ்தல் என்ற தத்துவத்திற்கு முதலிடம் அளித்துவந்தவையேயாகும்.

பண்டைய கிரேக்கம் பாரெங்கணும் பவனிவந்ததாக வரலாறுகள் நமக்கு வரையறுக்கின்றன. நாகரிக நடமாட்டம் மிஞ்சிக் கொஞ்சிக் கிடந்தது என்று கூறிடக் காண்கிறோம். வீரவாழ்வு பேராரவாரத்தோடு பிறங்கிற்று என்று அறிகிறோம். மனுநீதி மன்னர்கள் எல்லாம் மண்ணதிர விண்ணதிர எண்டிசையும் புகழதிர ஏற்றம் பெற்றுப் பெருமையுற்று வாழ்ந்ததாகச் சரித்திரம் நமக்குச் சாற்று

கிறது. அப்படிப்பட்ட சீரும், சிறப்பும், பீடும்பெருமையும், பெற்று வாழாது வாழ்ந்ததாகக் கூறப்படும் கிரேக்கத்தின் அரசியல் அடிப்படையிலும் சரியே, சமுதாயச் சந்தையிலும் சரியே உழைப்புக்குப் பெருமை தரப்படவில்லை. மாறாகக் கிரேக்கமண்ணிலே பிறந்தவர்களே இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆள ஒருவகையும் —அடிமைப்பட ஒருவகையும் எனும் நிலை நிலவிற்று. கிரேக்கர்கள்—அடிமைகள் என்ற இரு வகுப்பால்.

கிரேக்கர்கள் எனப்படுவோரே சமுதாயக் களத்தின் மேல்தளத்தில் வாழ்வதற்கென்றே இவ்வுலகுக்கு வந்தவர்களாகவும், அவர்களின் அருள்பாலிப்பினாலேதான் கிரேக்கமே கெம்பீர வாழ்வுபெற்று உலக அரங்கிலே உயர்நிலையுற்று ஒளிர்வதாகவும் எண்ணப்பட்டது. "அடிமைகள்...... ஹ்-ம்......" அவர்கள் இழிநிலையினர், பழிமொழிகளைத் தாங்கித் தாங்கிப் பலகாலும் உழைத்துத் திரவேண்டிய உலுத்தர்கள். கிரேக்கர்கள் ஏவுவதைச் செய்யவேண்டிய கடைநிலையினர்தானே என்றும் கருதப்பட்டனர்.

இவ்வாறான இருபெரும் பிரிவுகளின் அடிப்படையிலேதான் சமூக வாழ்வு அங்கே அமைக்கப்பட்டது. அதையொட்டித்தான் அரசியல் நூல்களும், பொருளியற் பனுவல்களும் எழுந்தன. அறிஞர்களும் அவ்வாறான கருத்துக்களுக்கு முதன்மையளித்தே தங்களது ஆய்வுரைகளை நடாத்தினர். எண்ணங்களின் அடிப்படையில் தானே ஏற்பாடுகள் அமையும்—உண்மையை ஒத்ததல்லவே!

கிரேக்கத்தின் மாபெரும் அறிஞன், கீர்த்தி வாய்ந்த தத்துவ வித்தகன், மெஞ்ஞான அறிவாலே விஞ்ஞானவிளைவுகளுக்கு விளக்கம் தந்த ஞானி என்றெல்லாம் புகழப்படுகிற அரிஸ்டாட்டிலே, தான் தீட்டியுள்ள அரசியல் நூலில் உடலுழைப்பை இழித்தும் பழித்தும், உழவை அடிமைகளின் தொழிலென ஒதுக்கியும் விடுகிறார். "ஈதல் அறம்" என்பதை அறிய மாட்டாத அறவோர்கள் வாழ்ந்த நாடல்லவா கிரேக்கம். அதன் வழியிலேதானே அமைப்பு முறைகளும்.

கிரேக்கமென்ன? மேலை நாடுகளின் பலப்பல பாகங்களிலே நடைபெற்ற ஆட்சி முறையிலும், அரசியல் அமைப்பிலும் சரியே உழைப்புக்கு உயர்வு தரப்படவே இல்லை. அதிலும் உழுவார் குடியைப்பற்றி எண்ணப்படவே இல்லை. மேலை நாட்டினர் யாவரும் அன்று எழுதியுள்ள அரசியல், பொருளியல் நூல்கள் யாவும் அரிஸ்டாட்டிலின் அரிச்சுவடியைப் பின்பற்றியே; பொருளாதாரத்தைப் பெருக்குபவர்கள் அரசன் என்றும், அவன் முறையிலே அவனுக்கு உதவியாக நின்று நிலவும் வாணிபப் பெருங்குடியினரே என்றும் மட்டுமே கொள்கின்றனர். எனினும் இன்றைய நிலையில் கால வேகத்தில் கருத்துக்கள் மாறுபட்டிருக்கின்றன.

மேலை நாடுகள் என்ன? கீழை நாடுகளில், அதிலும் நம்மோடு எதிராக உள்ள வடபுலத்தில்—கொண்ட கொள்கையே அப்படித்தான். அன்றைய நாளில் அவர்களிடையே நிலவிய பொருள் நூல்களில் தலைசிறந்ததாகக் கருதப்படுகிற அரசியற்பொருள் நூல் அர்த்த சாஸ்திரம். சாணக்கியனின் சாதுர்யத்தால் படைக்கப்பட்ட பனுவல். அதன் அடிப்படையே சாதிய வேறுபாடுகள் வேரூன்றிட வித்திடப்பட்டதாயிற்றே! நால்வருணம் வகுத்து அதில் உழுவார் குடியை, உழைப்பார் இனத்தைக் கீழ்வருணமாகக் காட்டுகிறது. அரசனே உலக வாழ்வுக் அடிப்படையெனவும், அவனின் அருள் இல்லை என்றால் அவனி நடைபெறாது எனவும் கூறுகிறது. வருணத்துக்கு ஏற்ற வாழ்வு முறைகள் வகுத்து வாழையடி வாழையாக ஒரு சமுதாயத்தினர் அடிமையெனும் மிடிமையிலே அவதியுறவும், மற்றொரு சமுதாயத்தினர் மாளிகையிலே மந்தகாச வாழ்வு நடாத்தி நாடாளவுமான நிலைமையை முறைப்படுத்தி வைத்திருக்கிறது என்பதையெல்லாம் நாமறிவோம்.

ஸ்மிருதியில் பிரகஸ்பதி என்பான் உழவினால் பொருளீட்டுதலை வேதத்தாலும், வீரத்தாலும், துறவாலும் பொருளிட்டுதற்கு அடுத்தபடியாகவும், சூதாலும், களவாலும் பொருளீட்டுதற்குச் சற்று உயர்ந்தபடியாகவும் கூறுகிறான்.

மனுவோ பசுக்கள், குதிரைகள் வண்டிகள் ஆகியவற்றை விற்று வாழ்வதோடு உழவுத்தொழிலையும் ஒப்பு வைத்து இவைகள் யாவும் இழிந்த தொழில்கள் எனக் கூறுகிறான்.

இவ்வாறாக, எங்கும் பண்டைய நாட்களில் உலகுக்கு உணவளித்து உத்தமமான வாழ்வை நெறிமுறையோடு நடாத்திய உழுவார் குடியினருக்கு உயர்வே தரப்படவில்லை. மாறாக, மனித இனத்தின் கடையில் மண்புழுக்கள்போல மதிக்கப்பட்ட காட்சியைத்தான் காண முடிகிறது. அவர்களின் அரசியல் அமைப்பு முறைகளும் அதைத்தான் கூறித் திரிகின்றன.

இப்படியாக உலகெங்கணுமே உழைப்பு மதிக்கப்படாமல் அது வெறும் பிழைப்புக்குத்தான் வழி


சேலம் மாவட்ட

**திராவிட மாணவர் முன்னேற்றக் கழக**

**முதல் மாநாடு**

அம்மாபேட்டை 2-ம் எண் மார்கட் மைதானத்தில்
22—2—60 ஞாயிறு காலை 9 மணிமுதல் இரவு 9 மணிவரை நடைபெறும்.

தலைவர்: எம். எஸ். வெங்கடாசலம், எம். ஏ.,

திறப்பாளர்: சீர்காழி சோமசுந்தரம், பி. ஏ.,

திரு. எஸ். டி. சோமசுந்தரம், (தி. மா. மு. கழகப் பொதுச்செயலாளர்)
மற்றும் பல மாணவத் தோழர்கள் மாநாட்டில் பங்கெடுப்பர்.

இங்ஙனம்,
இரா. வெங்கடேசன்,
வ. கு. தலைவர்.

செயலாளர்கள்:—
தென்னவன், இளங்கோ, அறிவுச்செல்வன், சுப்பராயன், செகதேவன்.

யென்று எண்ணப்பட்ட காலத்திலேயே "உழைப்பே உயர்வு," அதிலும் "உழவனே நாட்டின் உயிர்நாடி" என்ற கொள்கையைக் கொண்டிருந்தது தமிழகம் என்றால்; அதனின் தனிக் கீர்த்தியை, பெருங்கீர்த்தியை யாரே அளவிட முடியும்! இல்லாவிட்டால் வெள்ளைக்குடி நாகனார் என்ற புலவர், உழவர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் பேரவை சென்று, மன்னனைக் கண்டு, "மன்னனே! மணிமுடி தரித்தவனே! நீயோ அறவழி நின்று அரசோச்சாது அடாது புரிகின்றாய், நெறி தவறி வரி விதிக்கின்றாய், முறைதவறிக் கறை படிகின்றது உனது கொற்றம், 'பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே' என்பதை மறந்தனையோ" என்று நெஞ்சம் நிமிர்ந்து கொஞ்சமும் அஞ்சாது எடுத்து இயம்பி மன்னனைத் தட்டிக் கேட்க முடியுமா? கேட்ட மன்னனும் அப்படியா? அறியேன், இனி அடாது வரி விதியேன் என்று அருள முடிந்திருக்குமா?

இந்நிலையைப் பார்க்கிறபொழுது சுரண்டலற்ற, சுயநலமற்ற, உயர்வு தாழ்வற்ற அகன்ற இலட்சியம் இன்புடன் நடைபெற்றது என்பதை உலகெங்கணும் காணக் கிடைக்காத நோக்கிலே தமிழகத்திலே காணக் கிடைத்திருக்கிறது என்பது நன்றாகத் தெரிகிறது. நனி நாகரிகம் நிலைபெற்றுப் பல்கிப் பெருகிச் செழித்துக் கொழித்து விழுமிய மேன்மைகொண்டு வாழ்ந்திருக்கிறது என்பதைத் தெள்ளத் தெளிய அறிகிறோம். அதனால்தான் வள்ளுவர் வகுத்த தெள்ளு திருக்குறளில் "உழுவர் உலகத்துக்கு ஆணி" என்றார். "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்றார். 'உழுதுண்டு வாழ்வார்க்கு ஒப்பில்லை' என்றார். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்றார். அம்மட்டோடு, "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்று கூறிச் சாதிய அமைப்பு முறையைச் சாடினார்.

இன்றைய உலகில் ஒரு புதுக் கேள்வியைக் கிளப்புகின்றனர், சாதிய அடிப்படையில்லாமலே சராசரி உலகம் நடைபெற முடியும் என்பதை ஒத்துக்கொள்ள மனம் ஒருப்படாத சாதீய வெறியினர் சாதி தேவையில்லை, பிறப்பினால் உயர்வு தாழ்வு என்ற பேதாபேதங்கள் இல்லை என்பது சரிதான். ஆனால், இன்று தொழில் முறையிலே சாதீயம் புகுந்திருக்கிறதே, அதை எப்படித் தகர்ப்பீர்கள்? என்று கேட்கின்றனர். ஏதோ விடையே இல்லாத வினாவைக் கேட்டுவிட்டதுபோல.

வள்ளுவர் இப்படிப்பட்டவர்க்குக்கும் அப்பொழுதே வகையாகப் பதில் சொல்லிவிட்டார். முக்காலமும் உணர்ந்த மூதறிஞர் அல்லவா? அதை அறியாதார் இன்று ஆலாபனம் செய்கின்றனர்; பிறப்புவேற்றுமை ஒழிந்தால் தொழில் வேற்றுமை தொடங்குகிறது என்று. 'பிறப்பு ஒக்கும் என்னும் பொழுது ஒத்த பிறப்பினரானவர்களிடத்திலே தொழிற் சிறப்பு எப்படியப்பா வேற்றுமையை விளைக்க முடியும்? எனவே தொழில் வேற்றுமையால் வருகின்ற சிறப்பு ஒவ்வாது என்று அறுதியிட்டுக் கூறிவிடுகிறார். 'சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்' என்ற அடிகளால்.

வேற்றுமைகள் யாவும் தொழிலின் பாற்பட்டனவே தவிர, தொழிலைச் செய்யும் தனி மனிதனின் பாற்பட்டதல்ல என்பதை அறியவேண்டும் என்பதே திருக்குறள் தரும் தெளிவு.

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' எவ்வளவு அரிய பெரிய ஆய்வின் விளைவு. உலகம் சுழல்கிறது—சிலர் உலகத்தைச் சுற்றுகின்றனர்—சிலர் உலகத்தையே சுழற்றுகின்றனர். இதில் எதுவாக இருந்தாலும் எவராக இருந்தாலும் யாவரும் ஏரின்பின்னே நின்றுதான் தீரவேண்டுமே தவிர, வேறு எவ்விதமும் அல்ல என்பதனை அழகாக்கூறி, ஆணித்திறமாக மேலும், 'அதனால் உழந்தும் உழவே தலை' என்று வலியுறுத்துகிறார். இவ்வாறு பலப்பல கூறிப் பன்முறையும் வலியுறுத்தி 'உழவனை உலகத்திற்கு ஆணி' ஆக்கிவிடுகிறார் வள்ளுவர்.

இன்றைய உலகம் இதுபோதுதான், உழைப்பின் அடிப்படையிலேதான் மக்களின் நல்வாழ்வு நடமாடிக்கொண்டிருக்கிறது, அதிலும் உழவின் சிறப்பிலேதான் உயிர் வாழ்கிறது, உழவன் தோளிலேதான் ஞாலம் தொங்கிக்கொண்டிருக்கிறது என்ற உண்மையை உணருகிறது.

இந்த உண்மையை உணர, பிற நாடுகள் அறிய நடாத்திய போராட்டங்கள் பலப்பல, கொட்டிய குருதிகள் அளவில, கொடுத்த பலிகள் கணக்கில. ஆனால், இரத்தச் சேற்றை ஏந்தாமல், மேன்மையுற்ற நிலையில் உலகத்தின் நல்வாழ்வை உழவனின் ஏராண்மையிலே கண்டனர். அவனை வாழ்த்தினர், வரவேற்றனர், போற்றினர், புகழ்ந்தனர், புனிதவிழாவும் எடுத்தனர். அது பொங்கல் விழாவாகப் பொங்கியெழுந்தது.

இடைக்காலத்திலே எத்தர்கள் சிலரின் ஏமாற்று வித்தைகளால் தமிழரின் வாழ்வு சிதைந்து, சமுதாய ஒழுங்கு முறைகள் குலைந்து, சாதீயம் தலையெடுத்துத் தமிழரின் தனிப் பண்பாட்டை ஓரளவு தகர்த்தாலும், தமிழர் தனக்கென உள்ள அடிப்படை நெறிமுறைகளை மறக்கவில்லை. மறந்திருந்தால் மங்கல விழாவாகிய பொங்கல் விழா பொங்காமலே புதைந்திருக்கும்.

என்றாலும், இடையிலே ஆரியக் கலப்பால் ஒரு சில மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்திரன் நுழைந்தான், வருணன் வந்து சேர்ந்தான். இன்று அவைகளும் அறிவியக்கத்தின் அதிர்வேட்டால் உதிர்ந்தபடி இருக்கின்றன.

பொங்கல் விழா எவ்வளவு பொருளுள்ள விழா என்பதற்கு விழாவின் அமைப்புமுறைகளையே கூர்ந்து கவனித்தால் விளங்கக்கூடும். நன்றிமறவா நலம் சார்பினன் தனிப்பெரும் விளைவு இவ்விழா என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறலாம்.

முதல்நாள் பெரும் பொங்கல். வாசலிலேவைத்து, வண்ண இசை பாடி, வாழ்த்துகள் கூறி, சங்கம் முழங்க, சலங்கை குலுங்கப் பொங்கிடுவர். வாசலில் வைப்பதின் பொருளே இதுநாள் வரையில் இயற்கையன்னை தனக்கு வேண்டும்பொழுதெல்லாம் தன் பயிர் வளர, வளர்ந்து பயனளிக்கச் சிரிக்கும் செங்கதிராகவும், பெய்யெனப் பெய்யும் பெருமழையாகவும், மண்ணகவும், விண்ணகவும் நிலவாகவும், காற்றாகவும் உற்றுழி உதவி நின்ற வெற்றியைப் போற்றி அதற்கான நன்றிக்கடனைச் செலுத்துவதற்குத்தான்.

அடுத்த நாள் மாட்டுப்பொங்கல் தன்னோடு கோழி கூவினாலும்

கூவாவிட்டாலும் குறித்த நேரத்தில் எழுந்து, கோட்டான் கூவிவிட்டதன் பின்னே வீடு வந்து சேர்ந்து, சகத்தோழனாக ஏர் இழுத்து நாற்றிழுத்து, கதிர் உதிர்த்து, களங்குவித்து, இல்லமெங்கணும் பல்படுபொருளும் நிறைந்துவிட்டநின் உழைப்பைப் போற்றி அதற்கான நன்றிக்கடனாக ஆற்றும் விழாதான் மாட்டுப் பொங்கல்.

அதற்கும் மறுநாள் கன்னிப் பொங்கல். கன்னியர்கள் தங்களின் கைவளைகள் குலுங்கக் குலுங்க கலயத்திலே கஞ்சி தாங்கியும், நெஞ்சத்திலே அன்பைத் தாங்கியும்வந்து காலமெல்லாம் உழைக்கும் உழவனின் உறுபசியாற்றி கஞ்சியமுதோ, நின் நீளகரம்பட்ட கலயம் அமுதக் கலசமோ என்று உரியோனை எண்ணி ஏங்கிட இன்பமாய், எழிலாய் இருந்தும்; உழைப்பிலே எமக்கும் பங்குண்டு என்று பகராமலேயே நாற்று நட்டும், களையெடுத்தும், நெல்லடித்தும் புடைத்தும் உளம் பூரிக்க உழைத்த உன்னத நிலையைப் போற்றி அதற்கான நன்றிக் கடனாக ஆற்றும் விழாதான் கன்னிப்பொங்கல் விழா.

இம் மூன்று விழாவிலும் இவன் பெரும் இன்பம் இருக்கிறதே, அதுவே அவன் காணும் பேரின்பப் பெருவிழாவாகும்.

"எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்றமகற்கு"

என்ற பொய்யாமொழியினை மெய்யாக உணர்ந்தவன் அல்லவா தமிழன். அதனால் நன்றி மறத்தல் நன்றன்று என்று செய்ந்நன்றிக் கடனாற்றுகிறான்.

தமிழுலகமோ உழவின் அச்சிலே தான் உலகம் உருள்கிறது என்பதை நன்கு அறிந்திருக்கிறது. எனவே, உழவர் விழாவைத் தன் விழாவாகக்கொண்டு உழவர்குலத்திற்கே நன்றி நவிலுகிறது தானும் விழாவெடுப்பதன் மூலமாக. அதோடு உழவான் உழைப்பின் அடிப்படையிலேதான் உலகம் இயங்குகிறது என்பதை உணர்த்திக்கொண்டே இருக்கிறது தமிழ்மறையாகிய வள்ளுவர். அவ்வாறு உணர்த்தும் நிலைகண்டுதான் போலும் உழவர் விழாவாகிய பொங்கல் விழாவிலேயே திருவள்ளுவரின் பிறந்தநாள் விழாவினையும் கொண்டாட நாடெங்கணும், நகரெங்கணும்; பட்டிதொட்டிகள் மறுங்கினும் 'வள்ளுவர் வாரம்' என்பதை அறிஞர்கள் அமைத்தார்கள் போலும்.

அவ்வாறு அமைத்த முறையினையே ஆழ்ந்து ஆழ்ந்து, சிந்தித்துச் சிந்தித்து மகிழவேண்டியதாகவுள்ளது. 'பலகுடை நீழலும் தன் குடைக்கீழ்க் காண்பான்' உழவன் என்பதை உலகுக்கு முதலில் உணர்த்தியவன் வள்ளுவன். அப்படிப்பட்ட வள்ளுவனுக்குப் பொங்கல் நாளிலே பெருவிழா! எப்படிப்பட்ட இணைப்பு! எண்ணியெண்ணிக் களிக்காமல் என்ன செய்ய முடியும்?

தமிழகத்திலே இரண்டே இரண்டுக்குத்தான் எவரும் இகல் கூறுவதில்லை. ஒன்று பொங்கற்புது விழா, மற்றொன்று வள்ளுவரின் வாய்மொழியாகிய திருக்குறள். எனவே, இரண்டும் இணைந்ததிலும் வியப்பில்லை.

இவ்வுலகத்தில் பசியென்று ஒரு பிணி மனித வாழ்விலும் சரி, மற்றைய இன வாழ்விலும் சரி ஒற்றிக்கொண்டு உலவும்வரை உழுவார் பின்னதாகத்தான் உலகம் இருக்கும், அதனை முதன்முதல் எடுத்து உணர்த்திய வள்ளுவன் பின்னதாகத்தான் மற்றைய வாழ்வியல் நூல்களை அமைக்கமுடியும். அறுவடை விழாவின் அடிப்படையிலே விளையும் விழாக்களிலேதான் ஆனந்தம் பொங்கக்கூடும் என்பதுணர்ந்து தமிழ்த் திருமறை பாடிடுவோம்! தைத் திருநாளை கொண்டாடிடுவோம்! எந்நாளும்—எக்காலத்தும்—வாரீர்!

☆

# மலர்ச்சி எங்கே?

—[❋]—

ஆறு வேகமாகக் கடலை நோக்கி ஓடியது. அது ஓடிய பகுதியில் உள்ள எதற்கும், ஒரு துளி நீரைக் கூடக் கொடுக்காமல் தன் போக்கிலேயே வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. அப்படி ஓடிய ஆற்றைப் பார்த்து, "நீயேன் இப்படி யாருக்கும் பயன்படாமல் ஓடிக்கொண்டிருக்கிறாய்" என்று பலர் கேட்டனர். அதற்கு, 'நான் உங்களுக்குப் பயன்படலாம்; ஆனால் என் வாழ்வு மலராதே! எனவே என் வாழ்வு மலரத்தான் நான் என் போக்கிலேயே கடலரசனை நோக்கிப் போகிறேன். அங்கே சென்று அவனின் அணைப்பிலே சுகம் கண்டு...மேலும் அதுபற்றி நானே கூறக்கூடாது ... என்று நாணிக் கோணிக் கூறியவாறே வேகமாக ஓடியது.

எதிரே கடல்—தன் காதலன்—தன் வாழ்வு மலரப் போகிறது. ஆகா...அலைக்கரங்களை நீட்டி எவ்வளவு அன்போடு அலைகள் வரவேற்கப் போகின்றன என்று எண்ணியவாறு முன்னிலும் வேகமாக ஓடியது. கண்களை மூடியபடியே ஓடியது. எதிர்பாராதவிதமாக ஒரு குதுகுதுப்பு. ஆறு கடலோடு கலந்துவிட்டது. அதன் மொழியிலே கூறவேண்டுமானால் நதிநங்கை கடலரசனின் மடியில் தவழ்ந்தாள்.

சற்று நேரந்தான். பின் ஒரே கரிப்பு... அதைத் தொடர்ந்து ஒரே எரிப்பு... என்ன இது! ஒன்றுமில்லை...ஒரே உப்பு. கடலரசன் உப்புரசத்தானவன். அதனோடு கலந்த நீரும் உப்புத்தான். யாரும் கூறவில்லை. அதுவே உணர்ந்துகொண்டது.

"ஐயோ...! என் வாழ்வு மலரும் என்றல்லவா இங்கு வந்தேன்" அதன் மனமே அதைத் தாக்கியது. திரும்பிப் பார்த்தது. பூவுலகில் உள்ள ஒவ்வொரு பொருளும் மலர்ச்சி எங்கே? மலர்ச்சி எங்கே? என்று கேட்பதுபோல அதற்குப் பட்டது. மலர்ச்சி அங்கேதான் என்று கத்திவிடவேண்டும் என்று எண்ணித் தன் நாவை அசைத்தது. அதற்குள் ஒரு அலை எழுந்து அதன் நாவை அடித்துச் சென்றுவிட்டது.

❋

# மானம்

"தூக்கு"—நினைத்தாலே பயம் கூட்டும் சொல்! ஆம். அந்தத் தூக்குத்தான் துன்பத்தின் மீளாப் பிடியில் சிக்கித் தவிக்கும் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு விடுதலை அளிக்கும் மாற்று! பணத்தால் மட்டுமல்ல, மனத்தாலு கூட இன்னல் நேரும்போது பெரும்பாலோர் நாடுவது இதைத்தானே?

ஏழைகளுக்கு ஏற்படும் போராட்டங்கள் எல்லாம் பணத்தின் காரணமாகத்தானே அமைகின்றன? இன்னல்களைத் தாங்க முடியுமட்டும் தாங்கிக் கொள்ளுகிறார்கள். முடியாவிட்டால், பேசாமல் ஒரு நிமிடத்தில் தங்கள் உடலை மண்ணிலே கிடத்தி விடுகின்றார்கள்!

உடல் ஊசலாட — சுருக்குக் கயிறு கழுத்தை இறுக்க—மூச்சுக் குழலில் காற்றுக் கொப்பளிக்க—கைகால்கள் உதைத்துக்கொள்ள—இப்படிச் சித்திரவதைகள் பட்ட பிறகுதானே உடலிலிருந்து உயிர் போகிறது?

—இப்படிப்பட்ட பயங்கரங்களைத் தெரிந்து வைத்திருந்தும் கூட, நாளெல்லாம் சிறுகச் சிறுகச் செத்து மடிவதைவிட ஓரிரு நிமிடங்களில் துடித்துச் சாவதுமேல் என்று எண்ணியோ என்னவோ, என் கணவர்கூட அந்த முடிவைத் தான் தனக்குத் தேடிக் கொண்டார்.

காலையில் ஐந்து மணிக்கு எழுந்து, பகல் எல்லாம் வியர்வை ஆறாகப் பெருகியோட உழைத்து, இரவு பத்து மணிக்குக் கட்டையைத் தரையில் போடும் மனிதன் மாடாக இருக்க முடியுமே தவிர, மனிதனாக இருக்க முடியாது!

காலையில் எட்டு மணிக்குப் பணிமனையில் இருக்கவேண்டும்! மாலை ஏழு மணிக்கு வீடு வந்து இரவு உணவிற்கு ஏற்பாடு செய்து உண்டு முடித்து உறங்கவேண்டும் இப்படிப்பட்ட வாழ்க்கை என் கணவருக்கு உரியது!

அன்று காலையில் ஒன்றும் சாப்பிடுவதற்குச் செய்திருக்கவில்லை. நேற்று இரவு அரிசி கிடைக்காமல் போகவே அரை வயிறு கஞ்சிக்குக் கூட போதவில்லை! அப்படி இருக்க மறுநாள் காலை "பழைய சோற்றுக்கு" எப்படி எடுத்து வைப்பது? பிள்ளைகள் அழுதன—

**இளந்தமிழர்**

சமாதானப் பேச்சுக்கள் அவைகளிடம் தோல்வியுற்றன. வறுமையின் வெறியாட்டம்தான் குழந்தைகளிடம் செல்லுவதில்லையே! வெளியே கடன் கேட்பதற்கும் வழியில்லை. கொடுப்பவர் யாராவது இருந்தால்தானே? எவ்வளவு கடன் வாங்க முடியுமோ, அவ்வளவும் வாங்கியாகிவிட்டது. வீட்டிலாவது ஏதாவது பொருள் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை விற்றுத் தின்பதற்கு! இந்த நிலையில் என்ன செய்வது? குழந்தைகளைத் தேற்ற முடியுமானால் தேற்றலாம். மீறினால்?—கோபம் தாள முடியாமல் குழந்தைகள் முதுகில் இரண்டு வைத்தார் கணவர்!

நான் பயந்துபோய் விட்டேன்—வயிற்றில் ஒன்றுமில்லாமல் இருக்கும் குழந்தைகள் எங்கே அடி தாங்காமல் சுருண்டு விழுந்து விடுகின்றனவோ—என்று! தேம்பி அழக்கூடச் சக்தி இல்லை. பேசாமல் படுத்து உறங்கிவிட்டன.

கணவரின் கண்களில் கண்ணீர் கலங்கியது. வெளியே வந்த என்னை வருத்தத்தோடு பார்த்தார். "நம் குழந்தைகள் தானே—நமக்கு அடிக்க உரிமை இல்லையா?" என்று கேட்டு அவரைச் சமாதானப்படுத்தினேன். வெளியே யாரோ வரும் ஒலி கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

யாரும் இல்லை...நாங்கள் குடியிருக்கும் வீட்டின் சொந்தக்காரர் வந்துகொண்டிருந்தார். என்ன பேசப் போகிறாரோ—எதைக் கேட்கப் போகிறாரோ என்று நான் நிலைகொள்ளாமல் தவித்தேன்.

மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார் அவர்: "பாவம் நீங்கள் தொழிலாளிகள். என்ன செய்வது? வருவது உங்களுக்கே போதவில்லை. இப்படி இருக்க நீங்கள் குடிக்கூலி எப்படித் தரமுடியும்? வருகிற பத்தாம் தேதியோடு ஏழு மாதங்கள் பாக்கி ஆகிறது...நீங்கள் அந்த பாக்கியைக்கூடக் கொடுக்கவேண்டியது இல்லை. வீட்டைக் காலி செய்துவிட்டால் போதும்...நான் பணக்காரனாக இருந்தாலும் பரவாயில்லை. எனக்கு இருப்பதோ ஒரே ஒரு வீடு. வருகிற எழுபது ரூபாயை நம்பி இருப்பவன் நான். எப்படி நான் உங்களுக்கு உதவ முடியும்? சொல்லுங்கள்" என்று நிறுத்தினார்.

என் வீட்டுக்காரர் வாயைத் திறந்தார்......"சரிங்க.....இன்னும்

பத்து நாட்களில் காலிசெய்து விடுகிறோம்'' என்று சொல்லி விட்டு யோசனையில் ஆழ்ந்துவிட்டார். வந்தவரும் போய்விட்டார்.

உண்ண உணவில்லை...உடுக்க உடையும் இல்லை......இருக்க இடமாவது இருக்கிறதே என்று நினைத்திருந்தேன். அதற்கும் இன்று வந்துவிட்டது வேட்டு!

வீட்டுத் தொந்தரவு மட்டுமா எங்களை வாட்டியது? மளிகைக் கடையில் நாங்கள் கொடுக்கவேண்டிய நூற்றைம்பது ரூபாய்க்காக நாள்தோறும் நூற்றைம்பது முறை நடந்தானே கடைக்காரன்? அவனைப் பார்க்கும்போதெல்லாம் என்னுடைய உயிரணுக்கள் ஒவ்வொன்றும் அதிர்ந்து ஆடின!

"கடன்......கடன்'' தமிழிலே தேடிப்பிடித்தார்களே இந்தச் சொல்லை. வேறு எந்த மொழிக்காவது இந்தச் சொல்லைக் கடன் கொடுத்துவிட்டால் என்ன?'' என்று எனக்குத் தோன்றியது.

குழந்தைகளுக்குச் சிறிதாவது அறிவு வளரவேண்டுமே என்று அவர்களைப் படிக்கவைத்தபோது ஐந்து ரூபாய் பக்கத்துவீட்டாரிடம் வாங்கித் தந்தோம்...அந்தக்கடன் இன்றும் நின்று, உயிரை வாங்குகிறது.

ஒருமுறை பெரியவனுக்குக் காய்ச்சல் கண்டபோது 'பழைய சோறு' ஆகாது என்று மூன்றுவது வீட்டு இட்டலிக்காரரிடம் இருந்து வாங்கிய கடன் இன்னும் கொடுக்கப்படவில்லை.

எதற்கென்று பதில் சொல்லுவது? கணவன் படும் அல்லலை நினைத்து அழுவதா? குழந்தைகளுக்குப் பாலும் உடையும் இல்லையே என்று நினைப்பதா? மாற்றிக் கட்டப் புடவை இல்லையே என்று ஏங்குவதா? இல்லை—நாளெல்லாம் சரியான உணவின்றி உழைத்து உருக்குலைந்துபோகும் கணவரை நினைத்து உருகுவதா? எதை நினைப்பது? எதை நினைக்காமல் தள்ளிவிடுவது? ஒன்றும் விளங்கவில்லை.

இதே ஏக்கத்தில் இருமுறை பழையசோற்றில் உப்பை அள்ளிபோட்டுவிட்டேன். பிள்ளைகள் சொன்னபிறகுதான் பிழை தெரிந்தது. 'கொடுக்கிற சத்தற்ற உணவைக்கூடச் சரியாகக் கொடுக்க முடியவில்லையே' என்று ஒருமுறை அழுது தீர்த்தேன்.

எனக்கு வீட்டில் மட்டும்தான் வேலை இருந்தது. ஆனால் அவருக்கு வேலையிலும்கூடத் தொந்தரவு தொடர்ந்து வந்தது. முதலாளியின் தொந்தரவைத்தான் கூறுகின்றேன்...

'மாதச் சம்பளத்தை வாரச் சம்பளமாக்கினார் — வாரச் சம்பளத்தை நாட்கூலியாக்கினார்'...... விடுமுறை நாட்களில் நாங்கள் என்னசெய்வது? வாதாடினார் என் கணவர். தனிக்கட்டையால் என்ன செய்யமுடியும்? கூட இருந்தவர்கள் கேட்க அஞ்சினார்கள் — பயன்: 'பொல்லாதவன்' என்ற பட்டம் என் கணவருக்குக் கிடைத்தது! இதுதானே நாங்கள் கண்டது?

அன்று மாலை மணி ஐந்து இருக்கும்... வானம், மப்பும் மந்தாரமுமாக இருந்தது! மழையும் பெய்த பாடில்லை — வெயிலும் காய்ந்த பாடில்லை! உடல் புழுங்கியது... வழக்கத்திற்கு மாறாகக் கணவர் சற்று முன்பாகவே வந்துவிட்டார். எனக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது...கைகால்கள் கழுவிக் கொண்டு வந்தார். அருகே சென்றவுடன் தூக்கி வாரிப்போட்டது எனக்கு! அவர் கண்கள் சிவந்திருந்தன. மூச்சு, சில சமயங்களில் அதிகமாக வாங்கியது! மெதுவாக உட்கார வைத்து "என்ன?'' என்று வினவினேன்.

"மங்கை'' என்றார்,

நான் அவர் முகத்தைப் பார்த்தேன்.

"மானம் பெரிதா? உயிர் பெரிதா?''

நான் திடுக்கிட்டேன்.

'எது, சொல்?'' என்றார்.

''மானம்'' என்றேன். 'எதற்காகக் கேட்கிறீர்கள்?' என்று தொடர்ந்து கேட்டேன்.

"இல்லை. மானம் போனபின் உயிர் வாழ்வது தவறுதானே? அதற்காகக் கேட்டேன்'' என்றார்.

எனக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. "பொல— பொல'' என்று கண்ணீர் விட்டுக் கொண்டே, "உங்கள் பேச்சே ஒரு மாதிரி இருக்கிறதே — நீங்கள் சொன்னமாதிரி ஏதாவது செய்துவிடப் போகிறீர்கள்—வேண்டாம்—புத்தியை அந்தப் பக்கம் திருப்பாதீர்கள்—நாம் கடன் வாங்கினோம். அதைக் கொடுக்காமல் மோசம் செய்யப் போவதில்லை — கையில் கிடைத்தால் கொடுத்துவிடுவோம்; இன்றில்லையானால் நாளை—அதற்காக "மானம்...ஈனம்'' என்று சொல்லிக்கொண்டு ஏதாவது செய்துவிடாதீர்கள்'' என்று தேம்பித் தேம்பி அழுதேன்.

அவர் மெதுவாக என் கன்னத்தைப் பிடித்து, அருகில் இழுத்து, மெல்ல முகத்தோடு முகம் வைத்துக்கொண்டு பேசினார்: "பைத்தியக்காரி நீ...தவறாகப் புரிந்துகொண்டாய்! நான் கேட்டது வேறு காரணத்திற்காக! பயப்படாதே! நாளைக் காலையில் இருக்கிற மூட்டை முடிச்சுகளோடு தயாராயிரு. உன் அத்தை வீட்டில் இருந்துவிட்டு இரண்டு வாரம் கழித்துவா. அதற்குள் நிலைமை சீக்கிரத்தில் மாறும். உன்னை அழைத்துக்கொள்ளுகிறேன்'' என்றார்.

மறுநாள்—இரயிலடியில் பிரிய முடியாமல் பிரிந்தோம். இருவர் கண்களிலும் நீர் நிறைந்திருந்தது. இன்னுமொருமுறை கணவரைப் பார்க்கவேண்டுமென்று கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தேன். இரயில் வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது.

*

ஊர்ப் பெண்களின் பார்வைக் கணைகளைப் பொறுத்துக்கொண்டு எப்படியோ நான்கு நாட்களைக் கழித்துவிட்டேன்... 'ஏதோ நிலைமை மாறும்'' என்றாரே, திருந்திய பிறகு அழைத்துப் போவார், சென்று நல்ல வாழ்வு வாழலாம் என்று மனக்கோட்டை கட்டினேன். அந்த மன அமைதியில் சிறிது சாப்பிடவும் முடிந்தது. "இந்நேரம் வீட்டைக் காலி செய்திருப்பார்'' என்ற நினைவு வந்ததும், 'அவர் எங்கே உண்ணுகிறாரோ? எங்கே உறங்குவாரோ' என்று ஏக்கம் கொண்டேன். இரவெல்லாம் தூக்கம் இல்லாமையால் முகம் ஊதிக் கிடந்தது!

ஊரிலே இருந்த பள்ளிக்கூடத்தில் இரண்டு பிள்ளைகளையும் அனுப்பிவிட்டு நான் நெல் காய வைத்துக்கொண்டிருந்தேன். அப்போது தபால்காரர் வந்து,"அம்மா —தந்தி'' என்றார். உள்ளே அடுப்படியில் வேலை செய்துகொண்டிருந்த அத்தை வெலவெலத்துப்

போய் ஓடிவந்து 'என்ன? என்ன' என்று பதறினாள். நான் மட்டும் மரம்போல் நின்றுகொண்டுஇருக்க முடியுமா? 'என்னவோ? யாருக்கு எது நேர்ந்துவிட்டதோ?' என்று ஒத்துப்பாடினேன். தபால்காரர் பெயரைப் படித்தவுடன் 'அது வேறு யாருக்கும் அல்ல — எனக்குத்தான்' என்று தெரிந்தவுடன் என் நெஞ்சு வெடித்துவிடுவதுபோல் 'படபட'வென்று அடித்துக்கொண்டது. செய்தி தெரிந்ததும் அப்படியே வேரற்ற மரம்போல் சாய்ந்தேன்... சற்று நேரம் கழித்துக் கண்விழித்துப்பார்த்தபோது, இரண்டு பிள்ளைகளும் என்னையே பார்த்து அழுதுகொண்டு இருந்தார்கள். அத்தையும் இன்னும் நான்கு பெண்களும் நான் மயக்கம் தெளிந்து எழுந்தவுடன் என்னைத் தேற்றுவதற்குத் தயாராய் இருந்தார்கள்.

ஆமாம். கணவர் இறந்துவிட்டார்—நான் உடனே போகவேண்டும். "அம்மவோ... பாழும் உலகு எங்களுக்களித்த பரிசு இதுவோ? சமுகத்தின் கொடுமைகளுக்கு முடிவே கிடையாதா?" என்று என் உள்ளம் குமுறியது! வீட்டிற்குச் சென்ற பிறகுதான் 'தூக்கு' போட்டுக்கொண்டு இறந்துவிட்டார்—என்று தெரிவித்து வீடெல்லாம் புரண்டுஅழுதேன். கண்ணீர் இருக்குமட்டும் அழுதேன். முகத்திலும் வாயிலும் அடித்துக்கொண்டேன். தரையிலே மண்டையை மோதிக்கொண்டேன். குருதி கீழே சொட்டுச் சொட்டாகச் சிந்தியது. யாரோ என்னைப் பிடித்து இழுத்துப் போனார்கள்.

யார் செய்த தொந்தரவு தாளாமல் இந்த வேலை செய்துகொண்டாரோ? வீட்டுக்காரர் 'ஏன் காலி செய்யவில்லை?' என்று துன்புறுத்தினரோ? அல்லது கடைக்காரன் மானம் போகும்படி நான்குபேர் நடுவில் கடனைக் கேட்டு வற்புறுத்தினனோ? எவர் என்கணவருடைய அழிவிற்குக் காரணமாய் இருந்தனரோ?—என்று அழுது அரற்றினேன்.

"ஐயோ-எப்படி எல்லாம் துடித்தாரோ? கண்கள் வெளியேகழண்டு வந்தபோது எப்படிச் சித்திரவதைப்பட்டாரோ? இதை எல்லாம் சொல்லி அழுதுகொண்டிருக்கின்றேனே, நானும் ஏன் சாகக்கூடாது?" என்று குமுறினேன். 'அம்மா, அம்மா' என்று பிள்ளைகள் அருகே வந்து நான் அழுவதைக் கண்டு அழ ஆரம்பித்தார்கள். எனக்குப் 'பகீர்' என்றது! "நாமும் போய்விட்டால் இவர்களைக் காப்பாற்றுவது யார்? என் குழந்தைகள் அனாதைகளாகத் திரியலாமா? — கூடாது — நான் சாகக்கூடாது—நான் வாழ்வேன்—என் பிள்ளைகளைப் பெரியவர்களாக்குவேன்—அவர்களின் பாதங்களில் பணம் புரளுவதைக் கண்டு மனதார இறப்பேன்." என்று கதறித் துடித்தேன். கண்ணீரும வற்றியது. நாக்கும் வரண்டது — என்னவரை மண் மூடியது!

மறுநாள் என்கணவருடன் பணிபுரிந்த நண்பர் ஒருவர் எங்களுக்கு ஆறுதல் சொல்லிப்போக வந்தார்- அவரிடம் விசாரித்தேன்— "எப்படி இது நேர்ந்தது?" என்று.

"எப்படி இறந்தார் என்று பிறர் சொல்லத்தான் எனக்கும் தெரிந்தது. ஆனால் அன்று காலையில் கூட அவரை வந்து வேலைக்கு அழைத்தேன். மறுத்துவிட்டார். அப்போது நன்ருகவே இருந்தார்" என்ருர்.

"வேலைக்கு வர மறுத்துவிட்டாரா? ஏன்?" என்றேன்,

"ஒன்றும் இல்லை. சிறிய விஷயம்தான். ஒரு வாரம் ஆகி இருக்கும் நடந்து. மறதியாக முதலாளி நூற்றைம்பது ரூபாய் உள்ள உறையை மேசைமேல் வைத்துவிட்டாராம். திரும்பி வந்தபோது அதைக் காணவில்லை. இவரைக் கேட்டார். 'இல்லை' என்று கூறிவிட்டார் இவர். பிடிவாதக்காரர் முதலாளி என்பதுதான் தெரிந்ததாயிற்றே. 'நீதான் எடுத்தாய்... மரியாதையாக நான்கு நாட்கள் அவகாசம் தருகிறேன். இல்லை என்ருல் கம்பி எண்ணவேண்டி வரும்' என்று மிரட்டினுர். மூன்று நாட்களாக இவர் வேலைக்கே வரவில்லை. நான்காம் நாள் எதையோ தேடப்போய்ப் பணம் கிடைத்தது மறுநாள் செய்திசொல்லி அழைத்துப்போக வந்தேன். அப்போது தான் இந்தமாதிரி ஆகியிருந்தது. 'என்ன?' என்று அக்கம்பக்கம் விசாரித்தேன். கடன் தொல்லை தாளாமல் இந்த வேலை செய்து கொண்டார்" என்று சொன்னார்கள் என்ருர்.

நான் புரிந்துகொண்டேன். என் கணவர் கடன் தொல்லையால் சாகவில்லை. 'திருடன்' என்ற ஒரே சொல்லிற்காகத் தன் உயிரைத் தியாகம் செய்திருக்கிருர். மானம் பெரிது என்று அடிக்கடி அவர் சொன்னதன் பொருள் இப்போதுதான் புரிகிறது. கடன் தொல்லையில் இறக்கவில்லை அவர். அவமானச்சொல் தாளாமல் இறந்தார். ஆம். மனைவி மக்கள் என்ற நினைவையே அழித்துவிட்டது அந்த அவச்சொல்.

அவரைக் கொன்ற குற்றத்தை யார் ஏற்றுக்கொள்ளுவது? முதலாளி ஏற்றுக்கொள்ளுவாரா? மாட்டார்—ஆனால் அவரை, அவர் மனச்சாட்சி விடாது குத்திக் கொல்லும்—"ஏழையின் கண்ணீர் வேல்முனைக் கூர்" என்பதை அப்போதுதான் தெரிந்துகொள்வார். "என் கணவர் போனபின் இந்த உலகில் நான்யாருக்காகப் பயப்பட வேண்டும்? மானத்தோடு வாழ்வேன்—பிள்ளைகளை வளர்ப்பேன —மடிவேன் — இடையே எவராவது வந்தார்கள்? — அவர்கள் தூள்...தூள்" நான் பேசமுடியாமல் வாய்மூடினேன். எங்கோ படப்பாட்டுக்களைப் போட்டுக் கொண்டிருந்தார்கள். "மானம் ஒன்றே பெரிதெனக்கொண்டுவாழ்வது நமது சமுதாயம்" என்ற வரி என் காதைத் துளைத்தது. என் மனம் குளிர்ந்தது.

"மானத்தோடு வாழ்ந்தார் — அவர் மானத்திற்குக் கேடு வரும் போல் தோன்றியவுடன் உயிரை விட்டார்"—என்று காலம் சொல்லிக்கொண்டே இருக்கும் என்ற அமைதியோடு நான் சென்றேன்!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

கள் ஏன் என்பது நமக்குத் தெரியவில்லை. அதுபோல "மேலும்" ஒரு உணவுத்துறை, "கீழும்" ஒரு உணவுத்துறை' "கீழுள்ளவர்" மேலுள்ளவரைத்'த்தானே எதற்கும் எதிர்பார்க்கவேண்டியதிருக்கிறது!

இப்போதைய ஆட்சியினர் கூடச் தற்சமயம் இருக்கிற உணவு மண்டலங்களையெல்லாம் பின்னர் ஒன்ருக்கப்போகிறோம் என்று பேசி வருகிறார்கள். இதுபோலவே மின்சாரம் வழங்குவதையும் மண்டலமாக்கிப்பின்னர் ஒரே மின்சார மண்டலமாக்கப் போகிறார்களாம்!

இவ்வகையில் மத்திய அரசு ஒரே "அதிகார மண்டல"மாக்கப் பட்டிருக்கிறது. இந்திய அரசியல் அமைப்பை அமைத்தவர்களுக்கு இதெல்லாம் தீது என்பது தெரியத்தான் செய்யும். என்றாலும் செய்தார்கள்! அதற்கு அவர்கள் கூறும் காரணம் "இல்லாவிட்டாலும் இந்தியா பிளவுபட்டுவிடும்" என்பதுதான்.

"இந்தியா பிளவுபட்டுவிடுமே" என்று நொண்டிச் சாக்குக் காட்டி மத்திய ஆட்சியை 'அதிகாரக் குவியல்' ஆக்குகிறார்கள்! வளரும் இவ்வதிகாரக்குவியல் வளர்ந்து கொண்டேபோனால் நாளடைவில் 'லாஸ்கி' அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல இது சர்வாதிகாரத்திற்குத்தான் வழிவகுக்கும். (The concentration of the power to interpret in the same hanes as the power its administer has always. historically, been associated with tyranny"—Harold Laski in his "A Grammar of Politics") இந்த எண்ணத்தில் மத்திய ஆட்சியை வலுப்படுத்தி வருவது கூட்டாட்சியில் மக்களுக்கும் சிற்றரசுகளுக்கும் உள்ள உரிமையைப் பறிப்பதாகும். எனவே இந்திய அரசியல் அமைப்பு நமக்கு ஓர் அடிமைச் சாசனமாகும்!

"ஒரே இந்தியக்" கனவினால் ஏதேதோ செய்கிறார்கள். இது பாறாங்கல்லை மலை உச்சிக்கு உருட்டிக்கொண்டு போவதுபோல் இருக்கிறது. உச்சிக்குக் கல்லைக்கொண்டு போய்ச் சேர்ப்பது கடினமான செயலாகும்—ஆபத்து நிறைந்த ஒன்றுகும்—சிறிது தவறினாலும் போதும்; அது அவர்களையே நசுக்கிவிடும்! இதை அவர்கள் உணரவேண்டும்! ✽

# வசைமொழிவோர் சிந்தனைக்கு...!

OOOOOOO(சி. பெரியண்ணன்)OOOOOOO

தென்னகத்து மக்களின் விடுதலைக்கும் நல்வாழ்விற்கும் பாடுபடும் திராவிட மக்களின் மாபெரும் இயக்கந்தான் திராவிட முன்னேற்றக் கழகம். அரசியல் தெளிவு படைத்து அடிமைத்தளையறுத்த ஆப்ரகாம் லிங்கன் வரையறுத்துக் கூறிய,

"மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களாட்சிதான் குடியாட்சி"

என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டு, மக்களின் சக்தியால் வளர்ந்து வரும் அரசியல், சமுதாய, பொருளாதார விடுதலை இயக்கந்தான் திராவிட முன்னேற்ற கழகம்.

மண்ணுக்குரியவர்களை மாற்றாரின் வஞ்சக விஷமச்செயலைச் செய்தால் அதைபற்றி என்னவென்று தான் சொல்லுவதென்று ஒன்றும் புரியவில்லை. அந்நியன் தாள் பணிந்து அடிமை ஆட்சி புரியும் தமிழகத்து ஆளும் கட்சித் தலைவர்கள், தமிழகத்துச் சுதந்திரத்தைப்பற்றி எண்ணிப் பார்க்காததேனோ? பதவியின்மேல் உள்ள ஆசையோ! அல்லது, பகட்டுக்கோ! நாம் அறியோம்!

பதவி மோகத்தால் பகைவன் காலடியில் மண்டியிட்டுக் கிடந்தாலும், தான் பிறந்த நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடும் நல்லவர்களை, சில குணம் படைத்த சிங்கங்களைப் பொல்லாதவார்த்தைகளால் ஏசாதாவது இருக்கலாகாதா! ஏசுதலினால் விடுதலை விரும்பிகள் கேடொன்றையும் அடையப் போவதில்லை. அவர்கள் ஏசுவதின் காரணம், பதவிகொடுத்துப் பக்கத்துணையாயிருக்கும் மாற்றாரின் மதிப்பைப் பெறத்தானோ என்னவோ!

சில தினங்களுக்கு முன் வண்ணாரப் பேட்டையில் சத்தியமூர்த்தி தேசிய சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கனம் காமராசர்,

"தி. மு. க. ஆக்க வேலையில் ஈடுபடுவதற்குப் பதிலாக வடநாட்டான் தென்னாட்டானைச் சுரண்டுகிறான் என்று வெறும் கிளர்ச்சி செய்துகொண்டு சக்தியை வீணாக்குகிறது."

என்று பேசியுள்ளார்.

தி. மு. கழகம் ஆக்கவேலையில் ஈடுபடவில்லை என்று இடித்துக் கூறும் தமிழகத்து அரசு பீடத்தின் முதலமைச்சர், தான் ஆளும் நாட்டின் ஆக்கத்திற்கேற்ப ஆக்க வேலைகளை நிறைவேற்றியுள்ளாரா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

தென்னகத்தில் விளையும் பொன்னையெல்லாம் வடநாட்டுக்குக் கொட்டி அழுதுவிட்டு "பணமில்லை என்றால் வரி போட்டுத்தானே ஆகவேண்டும்" என்று முகாரி பாடுவதுதான் ஆக்க வேலையா? தென்னாட்டில் தி. மு. க. இல்லை என்று சொன்னால் டெல்லி பிச்சையாகக் கொடுக்கும் இப்போதைய திட்ட ஆக்க பட்ஜெட்டில் எத்தனையோ கோடி துண்டு விழுந்திருக்கும், இனியும் விழுந்து கொண்டேயிருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். காவடி தூக்கிக்கொண்டு டெல்லிக்குச் சென்றாலும் (கிடையாது போ என்ற) கரி பூசிக்கொண்டு திரும்பி வருபவர்கள் தி. மு. கழகத்தைப் பார்த்து, அது ஆக்கவேலையில்

ஈடுபடவில்லை" என்று சொன்னால் அவர்களின் சொல்லிலே என்ன பொருள் இருக்க முடியும்?

பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டு அதை நிறைவேற்ற வடக்கு நோக்கிச் சென்று அங்கு வரம் கிடைக்காமையால், வாயைப் பொத்திக்கொண்டு திரும்பிவரும் தமிழகத்து அமைச்சர்கள் "வடநாட்டான் தென்னாட்டானைச் சுரண்டுகிறானும்" என்று சொல்வதிலே பெரிய ஆச்சரியத்தைத் தான் நம்மால் காணமுடிகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கேட்டது எவ்வளவு? வடநாட்டுச் சர்க்கார் கொடுத்தது எவ்வளவு? தனித் தமிழ் உணவு மண்டலம் என்ன ஆனது? பக்கிங்காம் கால்வாய், தூத்துக்குடி, சேது சமுத்திர திட்டங்கள் நிறைவேற்றப்பட்டனவா? ஹிராகுட் அலுமினியத் தொழிற்சாலையையும், சேலத்து அலுமினியத் தொழிற்சாலையையும் கொஞ்சம் திரும்பிப் பார்க்க வேண்டாமா?

வடநாட்டில் மூன்று இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் வேலை துவங்கிவிட்டன. இரும்பு உற்பத்தி 98% வடநாட்டில். மற்றுமொரு தொழிற்சாலை பீகார் மாநிலத்திலுள்ள பொகாரா என்னுமிடத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ளார்கள். ஆனால் சேலத்து அலுமினியம், இரும்பு உருக்கு தொழிற்சாலை என்ன ஆயிற்று?

"நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி, சேலத்தில் கிடைக்கும் இரும்புத் தாதுப் பொருளை உருக்குவதற்குத் தகுதியுள்ளதாக இருந்தால்தான் சேலத்து இரும்பு உருக்குத் தொழிற்சாலை நிறுவுவது பற்றி ஆராயப்படும்."

என்ற பதிலோடுதானே நின்று கொண்டிருக்கிறது. வீடுகட்ட இந்திய சர்க்கார் ஒதுக்கிய 204·90 இலட்சத்தில் நம் மாநிலம் பெற்றது 8 இலட்சம்.

சேரி ஒழிப்புத் திட்டத்திற்குப் பம்பாய், கல்கத்தா ஒவ்வொன்றும் 3 கோடியைப் பெற்றிருக்கிறது. ஆனால், சென்னையும், பெங்களூரும் 1 கோடியைப் பெற்று வந்திருக்கின்றன. பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு மட்டும் 329·98 கோடி செலவழித்தும், 38·64 கோடியை ஒதுக்கியுமிருக்கிற டெல்லி சர்க்கார், 90க்கு மேல்பட்ட உடன் பிறந்த சகோதரர்களை அக்ரமத்துச் சாவின் பசிக்கு ஈந்துவிட்டுத் தமிழ்நாடு திரும்பினால் போதும், போதும் என்று கண்ணீரும் கம்பலையுமாய் ஓடிவந்த இலங்கை அகதிகளுக்குக் கோடிக் கணக்கில் அல்ல, எத்தனை ரூபாய்களைச் செலவழித்துள்ளார்கள்; ஒதுக்கியுள்ளார்கள்!

"வடநாடு தென்னாட்டைச் சுரண்டவில்லை" என்றுரைப்பது எவ்வளவு பெரிய ஏமாற்றம்! அதிலும் பொறுப்புள்ள பதவியிலுள்ளவர்கள், வடக்கே சென்று ஏமாந்து வந்தவர்கள் கூறினால் அதைக் கேட்டு நாம் ஆச்சரியப்படாமல் இருக்க முடியுமா?

அதே இடத்தில் அவர் தொடர்ந்து பேசியபோது,

"தென்னாட்டின் நலன்பற்றி தி. மு. க. வுக்குக் கவலையில்லை. காங்கிரசை அழிப்பதில்தான் அவர்களுக்கு கண்ணும் கருத்தும்" என்று கூறியுள்ளார்.

கனம் மந்திரியார், திராவிட முன்னேற்றக் கழகம் நடந்துவந்துள்ள பாதையைச் சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டுகிறோம். அன்று தொட்டு இன்று வரை தி. மு. க. நடத்தியுள்ள போராட்டங்களை எண்ணிப்பார்த்து நெஞ்சிலே கைவைத்து நேர்மையின் வழி நின்று பார்க்கட்டும்; அப்போராட்டங்களிலே அநீதியின் பிடியிலே சிக்கிச் சிதைந்து மண்ணோடு மண்ணான மாவீரர்களின் மண்மேடுகளைக் கேட்டுப் பார்க்கட்டும்! தி. மு. க. வுக்குத் தென்னகத்து நலன்களிலே அக்கரை உண்டா இல்லையா என்று. அவைகள் கூறி நிற்கும் எத்தனையோ நீதிப் பாடங்களை.

தமிழகத்தின் ஆட்சிப்பீடத்திலுள்ள காங்கிரசை அழித்துவிட்டுத், தி.மு.க. பதவி ஏற்று வடநாட்டான் காலடியில் மண்டியிட்டுக் கிடக்கும் என்பதுதான் அவரின் எண்ணமா? கட்சி எதுவாகவும் இருக்கட்டுமே! 'காங்கிரசாக இருந்தால் என்ன! கம்யூனிசமாக இருந்தால் என்ன! தென்னகத்தின் விடுதலைக்கும், சுபிட்சத்திற்கும் அடிகோலும் கட்சி எதுவானாலும் சரி, தோள்கொடுக்கத் தயார்!" என்றுதானே தி. மு. கழகம் கூறி வருகிறது. அதை மறந்து அப்பாண்டமாகப் பழிகூறி, அதற்குள்ள செல்வாக்கை அழித்துவிட முயல்வது ஆகாத காரியமாகும்.

பட்டம் பதவிகளுக்காக ஆசைப்பட்டு, கொண்ட கொள்கையைக் காற்றிலே பறக்கவிடும் கொள்ளைக் காரரின் கூடாரமல்ல தி. மு கழகம். ஆண்டாண்டுகாலமாக அடிமை நிழல்படாது ஆனந்தமாக வாழ்ந்திருந்த தென்னகம், வஞ்சகரின் பிடியிலே சிக்கி அவதியுறும் நிலையைமாற்ற அருப்பாடுபட்டு வரும் தமிழகத்தின் நலம் நாடும் ஒரே ஒரு கட்சிதான் தி. மு. க. என்பதை மட்டும் அவர்கள் மறக்க முடியாது; மறைந்துவிடவும் முடியாது.

அவ்வமைச்சரே செங்கற்பட்டு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் முதலாவது மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில்,

"அடைந்தால் திராவிட நாடு, இன்றேல் சுடுகாடு. என்று தி. மு. க வினர் பேசிய பேச்சுத் தேர்தலின்போது நின்று, மறுபடியும் கேட்டது. ஆனால் இப்போது அதை ஒத்திப்போடவும் தயார் என்கிறார்கள்." என்று கூறியுள்ளார்.

ஆம்! அடைந்தால் 'திராவிட நாடு; இன்றேல் சுடுகாடுதான். அன்றும் அதுவேதான், இன்றும் அதுவேதான்! பெறும் வரைக்கும் அதுவேதான்.

சோரச் சுந்தரியாய் சொகுசான மந்தகாச வாழ்விலே திளைப்பதைவிட, மானத்து மாதாவின் மடியிலே தவழ்ந்து கற்புக்கரசியாக வாழ வழிகாணும் வாழ்க்கையிலே காமுகரின் கடுஞ்செயல் குறுக்கிட்டால் சாவின் பிடியிலே வீழ்வதைத் தானே வீரர் உலகம் ஏற்கும். தங்களின் குற்றத்தை மறைக்க மற்றவரின் மேல் குற்ற வசைமாரி பொழிந்துவருவது நல்லதல்ல என்பதைக் குற்றம் புரிவோர் உணர வேண்டும்.

தேர்தலின்போது தி. மு. க. எந்தக் கொள்கை முழக்கத்தை முழக்காமல் மூடிவைத்துவிட்டது? 'திராவிடநாடு வேண்டாம்! தமிழ் நாடே போதும்' என்று சொல்லிற்று! அதோடு "ஏக இந்தியாவில் இருப்பதிலே எங்களுக்கொன்றும் ஆட்சேபனை இல்லை; தலைமைப்பீடமாக டெல்லியே இருக்கட்டும்! ஆனால்ஒன்று! எங்களுக்கு பதவி கிடைத்தால் போதும்!

எதற்கு அந்த வம்பெல்லாம்; தெம்பாகவாழ்வதற்குத்தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டால் அது போதும்! ஆகையால் நீங்கள் எங்களுக்கு ஓட்டுப்போடுங்கள்!'' என்று தி. மு. க. வினர் கூறினார்களா? சிந்திக்கவேண்டாமா!

வசைமொழிவோர், மறந்திருந்தால் அல்லது பார்க்காமல் இருந்திருந்தால் தி. மு. க. தேர்தலின் போது வெளியிட்ட விளக்க விளம்பரங்களை இப்போதாவது பார்க்க வேண்டுகிறோம்.

''தான் பிறந்த தென்னகம் தருக்கருக்கு அடிமைப்பட்டுத் தாங்க முடியாத சோகத்தில் வீழ்ந்து கிடப்பது சரிதானா? வற்றாத வளர் நதிகள் பாய்ந்தோடும் தென்னகத்து மண்ணில், கன்னலும், செந்நெல்லும் கண்ணுக்கெட்டிய தூரம் விளைவு தந்தும் விளைவிக்கும் மக்கள் 'கஞ்சி' 'கஞ்சி' என்று கதறும் நிலைக்குக் காரணம் என்ன? பொன் விளையும் பொன்னிவள நாட்டுச் செல்வத்தையெல்லாம் வாரி வாரி வடக்குக்குக் கொட்டி அழுது விட்டுக் குமுறும் நிலை சரிதானா? சிலத் திருவிடத்து மக்களே! சிறு நரிகள் உண்டு கொழுத்துச் சிங்கத்தைப் பட்டினிப்போட்ட கதையை நீங்கள் கேட்டதுண்டா? சிந்தியுங்கள்'' என்ற கருத்துப் பொங்க "வடக்கு வாழ்கிறது! தெற்குத் தேய்கிறது! ஆகையால் வாட்டத்தைப் போக்கிட நாட்டை மீட்டிட தி. மு. க.விற்கு ஓட்டளியுங்கள்'' என்றுதான் மக்கள் மன்றத்திலே முழக்கமிட்டது.

மணல்ஓடும் பாலாற்றைத்தேனோடும் ஆறாக்கி, நம்மாநிலத்தைத் தென்றலடிக்கும் சோலையாக்கித் தந்திடுகிறோம் என்றுரைத்து, பின் நம்பிக்கை மோசம் செய்ததா? சேலத்து இரும்பையெல்லால் எடுத்து, எலும்பொடியப் பாடுபடும் பாட்டாளி மக்களின் எலும் பாக்கி விடுகிறோம் என்று சொல்லி ஏமாற்றியதா? வறுமை ஒழியும், வாட்டம் ஓடும், புன்னகை பூத்திடும்; இனபம் தவழும். என்று மக்களுக்கு உறுதியளித்துவிட்டு ஒன்றுக்கு இரண்டாக விலைவாசியை ஏறவிட்டுவிட்டு, 'எங்களுக்கு ஓட்டளித்தவர்களே! உங்களுக்கு எங்கள் நன்றி!' என்று தி.மு.க. கூறிக்கொண்டிருக்கிறதா? நாக்கிலே நரம்பின்றிப் பேசுவது நாட்டை ஏய்ப்பதற்கா? அல்லது கேட்டைப் போக்க வழிகாண வேண்டாமா? நல்லவர்கள் சிர் தூக்கிப் பார்க்கட்டும்!

தி. மு. க. தேர்தலின்போது எந்த வஞ்சகத்தை நெஞ்சிலே மூடிவைத்துவிட்டு, இப்போது மக்களிடம் கொஞ்சி விளையாடுகிறது! கொஞ்சு மொழித் தமிழிலே கொள்கைகளை அன்று அள்ளி அள்ளி அளித்ததைதப்போலத்தான் இன்றும் இந்நாட்டிற்கு அளித்து வருகிறது. அதை மறந்துவிடவும் இல்லை; மாறாக நடந்திடவும் நினைக்கவில்லை. பிச்சையாக ஆட்சியைக் கேட்டு ஆண்டிட ஆண்டிகள் மடமல்ல தி. மு. கழகம் என்பதை ஆளும் கட்சியார் உணரவேண்டும். அப்படி ஆண்ட வரலாற்றை திராவிட வரலாற்றேட்டில் எதுக்கத்திலும் காணமுடியாது. மாற்றான் காலடியில் மண்டியிட்டு மானத்தை விலை கூறும் இனமல்ல திராவிட இனம் என்பதையும் உணரவேண்டும்.

உலக வரலாற்றறிஞர் இதுநாள் வரைக்கும் திராவிட இனம், நாடு, மொழி, பண்பாடு இவைகளைப் பற்றி அறுதியிட்டுக்கூறியவண்ணமிருக்கின்றனர் அவர்களைக் கேட்டுப்பார்க்கட்டும் தமிழினத்தின் பெருமைகளை. ஆனால் அயன்புரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் கனம் காமராசர் கேட்கிறார்,

''திராவிட நாடு என்பது ஈ. வெ. இராமசாமி நாய்க்கரின் கற்பனையில் உண்டான நாடு. ஆனால் அவரே அதை இப்போது கைவிட்டுத் திராவிட நாடு தற்கொலை நாடு என்று கூறிவிட்டார். இனி ஏது திராவிட நாடு'' என்று.

பெரியாரின் கற்பனையில் உருவான நாடென்றால் ஏக இந்தியா இன்பமாக வாழ இசைக்கும் நாட்டுப்பண்ணாகிய 'ஜனகணமன' என்ற கீதத்தை எழுதிய கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் பெரியாரின் யோசனையைக் கேட்டுத்தான் அப்பாட்டில் 'திராவிடயுட்கல வங்க' என்று பாடியிருக்கவேண்டும். இப்போது 'திராவிட நாடு தற்கொலை நாடு' என்று பெரியார் கூறிவிட்ட பின்னரும் ஏன் இன்னும் திராவிடயுட்கலவங்க' அப்படியே இருக்கிறது? நீக்கிவிடவேண்டாமா!

நாம் பிறந்த பொன்னாட்டை, தென்னகத் திருநாட்டை, திசைதோறும் இசைப்பரப்பி இன்புற்றிருந்த தென்னவர்தம் நாட்டைப் பார்த்து 'ஏது என்று கேட்கும் முதல் மகனை இப்போதுதான் திராவிடம் பெற்றிருக்கிறது திராவிட நாடு இல்லை என்று நேருவே சொல்லவில்லை. திராவிட நாடு இல்லை என்றால் திராவிடரும் இல்லை என்றுதானே பொருள். நேரு அவர்கள் எழுதிய உலக வரலாற்றைக் கனம் காமராசர் ஒரு தடவையாவது படித்துப்பார்க்கக் கூடாதா!

சற்றேறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் வதிந்த, நாகரிகம் படைத்த ஒரே ஒரு இனம் திராவிட இனம் என்று முரசு கொட்டும் சிந்து நதி தீரத்தில் மொஹஞ்சோதாராவில் கண்டெடுத்த புதைபொருள்களையாவது அல்லது அங்குள்ள மண் மேட்டையாவது கேட்டுப்பார்க்கக் கூடாதா திராவிடஇனம், திராவிட நாடு எது என்று. திராவிட நாடு ஏது என்று கேட்கும் அவர், முதலில் உலக வரலாற்றறிஞர்களுக்குத் தடைவிதித்து விட்டுத் திராவிட நாடு ஏது என்று கேட்டால் அதிலே பொருள் இருக்கிறது. அவர் கேட்கும் கேள்விக்கு மேலை நாட்டு வரலாற்று அறிஞர் வேக்குசன் பதில் தருகிறார். காது கொடுத்துக் கேட்கட்டும்.

''வரலாற்றுக் காலத்திற்கு முன் தொட்டே திராவிட மக்கள் இந்தியாவில் வாழ்கிறார்கள். அவர்கள் பிறப்புத் தென்னாடு என்பதை வரலாறுகள் கூறுகின்றன. நாங்கள் அறியக்கூடிய அளவில் அவர்கள் பழங்குடிகளாகவேதான் இருக்கிறார்கள்'' என்று கூறியுள்ளார்.

ஆனால் கனம் காமராசர் கேட்கிறார், "திராவிடநாடு ஏன்? இன்று கேட்பது பெரியாரின் கற்பனை நாடு'' என்று.

தந்தை தடுமாறும் நடைபோட ஆரம்பித்தால் தனயர்களும் அப்படிபோய்விடுவார்கள் என்பது அவரின் எண்ணமா? கொள்கை (துவக்கிய) ஆலமரம் வஞ்சகச் சொல்லினால் அரிக்கப்பட்டாலும், அம் மரத்திலிருந்து ஊன்றிய விழுதுகள் வலிவோடு பொருந்தி ஊன்றுகோலாய் நின்று கொள்கையாகிய ஆலமரத்தைக் காக்கும் என்பதை மட்டும் இந்நாட்டிலுள்ள எதிர்க்கட்சி நண்பர்கள் உணரவேண்டும். திராவிடரின் இனம், மொழி, வாழ்க்கைமுறை, பழக்க

வழக்கங்கள், பண்பாடுகள், அத்தனையும் வேறு; அந்த இனம் எப்போதும் தனித்துத்தான் இந்தியாவில் நடைபோடும். உணரமுடியாத கனம்கள் இதைப் படித்துப் பாருங்கள்!

"மொழி, வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்களில் வேற்றுமை நிலவியபோதிலும், கலாச்சாரத்தில் ஒற்றுமை நிலவுவதை கல்வியின் ஒரு பகுதியாகப் போதிக்கா விடில் நாடு ஐரோப்பாவைப்போல பிளவு படும்."

என்று பெங்களூரில் நடந்த அகில இந்திய வங்காளி இலக்கிய மாநாட்டைத் துவக்கிவைத்த போது, காந்தி நினைவு நிதித் தலைவர் டாக்டர் ஆர். ஆர். திவாகர் கூறியுள்ளார்.

'கலாசார அடிப்படையில் நாடு ஐரோப்பாவைப்போல துண்டாடிவிடும்' என்று எச்சரிக்கிறார். அன்றுதொட்டு இன்றுவரையில் எத்தனையோ இனமும் மொழியும், வாழ்க்கை முறையும், பழக்க வழக்கங்களும் தென்னகத்தில் வந்து திராவிடரை மயக்கித் தன்னினமாக்கிக்கொள்ள முற்பட்டதுண்டு. ஆனால் அனைத்திற்கும் இணங்காது தனித்தியங்கிவருகிறது திராவிடம். டாக்டர் திவாகரின் ஆராய்ச்சித்திறனை, கனம் காமராசர் 'ஏது' என்று ஒரே பதத்தில் மறைத்துவிடப்பார்க்கிறார். பெரியாரின் தற்கொலை நாட்டைக் காரணங்காட்டித் திராவிடநாட்டின் சுதந்திர தாகத்தைத் தணித்திட எத்தனிப்பது ஆகாத காரியம் மட்டுமல்ல; அரசியல் தெளிவு படைத்தவர்கள் கூறும் பொன்மொழியுமல்ல. உணர்ந்தவர் கூறுவதையாவது கேட்கவேண்டும், அல்லது பேசாமலாவது இருக்க வேண்டும். 'நான் உள்ளவரையில் காங்கிரசை அழியவிடமாட்டேன்' என்றுரைக்கும் அவருக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகிறோம். நீங்கள் உள்ளவரைக்கும் உங்களின் கூடாரமாகிய காங்கிரசை அழிய விரும்பாதபோது, திராவிடத்தார் மட்டும் தன் இனம் அழிவதைப் பார்த்துக்கொண்டிருப்பார்களா?

காங்கிரசைக் கட்டிக் காத்தாலும் கூட காங்கிரஸ்காரர்களே திராவிட நாடு கேட்கும் நாள் நெடுந்தூரமில்லை என்பதுமட்டும் உறுதி. "ஆ! அதுதான் முடியாது" என்போர் கீழே படியுங்கள்:

"இந்தியா ஐரோப்பாவைப்போல பிளவுறும் ஆபத்து வெறும் கற்பனையல்ல என்பதுடன் வெகுதூரத்திலும் இல்லை,"

என்று வங்காளி இலக்கிய மாநாட்டில் தொடர்ந்து பேசும்போது டாக்டர் திவாகர் கூறியுள்ளார்.

ஏக இந்தியாக்கள் அவர் ஆராய்வுத் திறனைச் சற்றுச் சிந்திக்க வேண்டுகிறோம்.

"நாட்டைத் துண்டாடுவதா! அது நடக்காதகாரியம்! தனிநாடு கேட்பது அறியாமைத்தனம்! அதிலும் திராவிடநாடு ஏது? தி. மு. க. வின் போக்கு வகுப்புவாதத்தை வளர்ப்பதாகவிருக்கிறது, அப்படி வளர்க்கும் செயல் சிறுபிள்ளைச் செயலாகும். கன்னடம் கருதவில்லை, கேரளம் காதுகொடுத்து அவர்களின் பேச்சைக் கேட்கவில்லை, ஆந்திரம் அக்கட்சிக்கு ஆதரவு தரவில்லை, திராவிடநாடாம்! திராவிடநாடு. திராவிடநாடு எங்கிருந்து பிரிந்துவிடும்?" என்றுரைத்து வருவோருக்கு டாக்டர் திவாகர் பதிலளிக்கிறார் கேளுங்கள்!

"காலஞ்சென்ற ஜின்னா ஆதரவளித்த திராவிடஸ்தான் கோரிக்கை ஏற்கெனவே பேசப்பட்டு வருகிறது......முதலில் பாகிஸ்தான் கூச்சல் கிளப்பப்பட்டபோது அது வெறும் தமாஷ் என்று கருதப்பட்டது, ஆனால் அது பலித்துவிட்டது"
என்று கூறியுள்ளார்.

ஏது திராவிடஸ்தான் என்றுரைப்போருக்குத் திவாகர் விளக்கம் தருகிறார்.

"திராவிடஸ்தான் ஏது என்று பேசுவோரே! திராவிடஸ்தான் கோரிக்கை ஏற்கெனவே பேசப்பட்டு வருகிறது. அது வெறும் கூச்சல் என்று நீங்கள் நினைப்பது தவறு. அத்திராவிடஸ்தான் கட்டாயம் பிரிந்தேதான் தீரும். எப்படி என்றால், அன்று ஜின்னா பாகிஸ்தான் கேட்டபோது நாமெல்லாம் என்ன நினைத்தோம்? இது தமாஷ் என்று நினைத்தோம். ஆனால் அது பலித்துவிட்டது. அதேபோலத் திராவிடஸ்தானையும் தி. மு. க-வினர் கேட்டு வருகின்றனர். அவர்களைப்பார்த்து நீங்கள் 'இவர்கள் வெறும் கூச்சல் போட்டுக்கொண்டு திரிகிறார்கள்', என்று பேசிவருகிறீர்கள். ஆனால் உண்மை என்ன? பாகிஸ்தான் பிரிந்ததைப் போலத்திராவிடஸ்தானும் சீக்கிரம் பிரியப்போகிறது" என்ற அடிப்படையில்தான் டாக்டர் திவாகரின் திராவிடநாட்டு ஆராய்ச்சிப்பேச்சு நமக்கு விளக்கம் தருகிறது.

இதை உணராத தமிழகத்துக் கனம்கள் கண்டபடி ஏசுவது ஏனோ தெரியவில்லை! அவர்களுக்கு ஒரு உண்மையைமட்டும் விளக்கமாகவும் உறுதியாகவும் சொல்லிவைக்கிறோம்! திராவிடநாட்டின் விடுதலை வெகுதொலைவில் இல்லை; விடிவெள்ளிமுளைத்துவிட்டது; இனவழி ஒன்றுபட்டு, மொழிவழி தனித்தியங்கி நான்கு மொழி (ஓரினம்) மக்களும் சீறி எழுந்திட்டால், சிங்கநடைபோடத் தொடங்கிவிட்டால், புரட்சிபொங்கிவிட்டால் நடக்காத காரியமல்ல!

தென்னகம் விடுதலையடைந்து தனித்திராவிடக் கூட்டுச் சுதந்திரக் குடியரசு நாடாகக் கூடிய சீக்கிரத்தில் அமைந்துவிடும் என்பதை உணரவேண்டுகிறோம்.

தான் பிறந்த நாட்டையும் தன் இனத்தையும் மாற்றானுக்குக் காட்டிக்கொடுத்து வாழ்ந்தது போதும். திருந்துங்கள்! இல்லையானால் வருந்துங்கள். விடுதலை பெற்ற திராவிட நாட்டு வரலாற்றில் கறைபடிந்த கனம்களாகக் காட்சிதருவீர்கள், உலகம் உள்ளவரைக்கும் 'தன்னினத்தைக் காட்டிக் கொடுத்த இனத்துரோகி' என்று வரலாறு முழங்கிக் கொண்டிருக்கும் அவ்விழிவோடு காட்சிதரத்தான் உங்களுக்குவிருப்பமா? சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டோம். நல்லெண்ணமிருந்தால் நாட்டை மீட்டிட மாற்றம் அடையுங்கள். இன்றைய இன்பம் நாளை இன்னலில் கொண்டுபோய்விடும் என்பதை மட்டும் உறுதியாக நம்புங்கள்! ஏசுவதை மாற்றிக்கொள்ளுங்கள்!

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.